பக்கங்கள்: பதினாறு

பொ. சன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 12 திங்கட்கிழமை (26-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:61

# வடக்கு - கிழக்கில் உள்ள படைகளுக்கு உத்தரவு வழங்கும் அதிகாரம் அரசுக்கு!

## மனோ - மலிக் குழுவுக்கு ஜனாதிபதியின் யோசனை

கொழும்பு,ஜனவரி26

**வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்கென முப்படைகளுக்குமான ஓர் இராணுவக் கட்டளைத் தளபதியை நியமித்து, அவருக்கு உத்தரவுகளை வழங்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார். ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.**

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே இணக்கத் தீர்வைக் காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மனோ - மலிக் குழுவினூடாக இந்த யோசனையை அரசிடம் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சை தன்வசமே தொடர்ந்து வைத்துக்கொண்டு, சமாதான முயற்சியை அரசு மேற்கொள்வதற்காக ஜனாதிபதி இந்நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறார் எனவும் செய்தி தெரிவிக்கின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு என்பது 2005ஆம் ஆண்டுக்கு முன் சாத்தியமே இல்லை என்கிறார் ஹக்கீம்

இனப்பிரச்சினைத் தீர்வு என்பது இன்னும் இரண்டு வருடங்களுக்குச் சாத்தியப்படாது. பிரதமரினதும், ஜனாதிபதியினதும் பார்வை 2005இறகு அப்பாலேயே உள்ளது. 2005இற்கு முந்திய அவர்களது பார்வை ஊனமுடையதாகக் காணப்படுவதனால், 2005வரை எதுவும் சாத்தியப்படுமென எதிர்பார்க்க முடியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கான அதிகாரப் பகிர்வு, சமாதான முன்னெடுப்புக்களில் முஸ்லிம்களின் நிலைப்பாடு ஆகியவை குறித்து முஸ்லிம் காங்கிரஸ் அரசமைப்புக் குழுவினருக்கும் கிழக்கு மாகாண புத்திஜீவிகளுக்குமிடையே நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றியபோதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இக்கலந்துரையாடலில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு இரகசிய கடிதமா? ஜனாதிபதி செயலகம் மறுப்பு

கொழும்பு,ஜன.26

சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரகசியக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார் என வெளியாகிய தகவல்களை ஜனாதிபதி செயலகம் மறுத்திருக்கின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்று அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கை போன்று எந்தவித இரகசிய ஒப்பந்தத்தையும் புலிகளோடு வைத்துக்கொள்ளும் எண்ணம் ஜனாதிபதிக்குக் கிடையாது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படும்போது அது பகிரங்கமாகவே இடம்பெறும். அத்துடன், மக்களுக்குத் தெரியாமல் எந்தவொரு பேச்சோ, கொடுக்கல் வாங்கலோ இடம்பெறமாட்டாது என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறார் - என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## சு.கட்சி-ஜே.வி.பி. கூட்டணி சமாதானத்துக்கு சாவு மணி!

### சட்டக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,ஜன.26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் சமாதானத்துக்கும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கும் விடுக்கப்பட்ட சாவு மணியாகும்.

- இப்படித் தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழீழ சட்டக்கல்லூரியின் 4ஆம் அணி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்றுக்காலை கிளிநொச்சியில் நடைபெற்றது. தமிழீழ நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இராணுவ ஆக்கிரமிப்புக்கள் அனைத்தையும் முறியடித்தமையினாலேயே சிங்களப் பேரினவாதம் எம்முடன் சமாதானப் பேச்சுக்களை நடதத முன்வந்தது.

பேரினவாதப் போக்குடைய சிங்கள தேசம், சமாதான வழியில் எமக்குரிய தீர்வை வழங்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. இருந்தபோதும், எமது போராட்டத்தின் நியாயப்பாட்டினை, சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவும் நாங்கள் யுத்தப்பிரியர்கள் அல்லர் என்பதை வெளிக்காட்டுவதற்காகவுமே சமாதான வழியில் முயற்சி செய்கிறோம்.

சர்வதேச அழுத்தம் காரணமாக எம்முடன் பேசவந்த அரசு, சிதைந்து



போன தனது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலேயே ஈடுபட்டுள்ளது. மீண்டும் தன்னைத் திடப்படுத்திக் கொள்ள பேரினவாதம் முற்படுகிறது. அதற்கு சமாதானத்தை ஒரு கருவி

(16ஆம் பக்கம் பார்க்க)

## அத்துருகிரிய 'மிலேனியம் சிற்றி' விவகாரத்தில்

## இராணுவ அதிகாரிகளுக்கு தண்டனை! ஜனாதிபதி பணிப்பில் தளபதி வழங்கினார்!!

### இருவர் பதவி நீக்கம்: ஒருவர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார்

கொழும்பு,ஜன.26

அத்துருகிரிய 'மிலேனியம் சிற்றி' இராணுவ இல்லம் தொடர்பான இரகசியங்கள் வெளியான சம்பவம் குறித்து குற்றவாளிகள் என ஜனாதிபதி ஆணைக் குழுவினால் இனங்காணப்பட்ட இரு இராணுவ அதிகாரிகள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். மற்றொரு இராணுவ அதிகாரி கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார். இன்னுமோர் இராணுவ அதிகாரியின் பதவி உயர்வுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். ஆணைக் குழுவினால் குற்றவாளிகள் என இனங்காணப்பட்ட படை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்திருப்பதை அடுத்தே இராணுவத் தளபதி இந்த உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்.

இராணுவக் கேணல் பராக்கிரம திஸநாயக்க, இராணுவ உளவுச் சேவையின் மேஜர் நஜித் கருணாரத்ன ஆகிய இரு அதிகாரிகளே சேவையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர்.

2001ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி 'மிலேனியம் சிற்றி' இராணுவ இல்லம் முற்றுகையிடப்பட்டபோது ராணு

(16ஆம் பக்கம் பார்க்க)

## 17 சட்டவாளர்கள் பட்டம் பெற்றனர்!

கிளிநொச்சி,ஜன.26

தமிழீழ சட்டக் கல்லூரியைச் சேர்ந்த 17 சட்டவாளர்கள் நேற்று தமக்குரிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

தமிழீழ சட்டக் கல்லூரியின் நான்காம் அணி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள தமிழீழ நீதிமன்றக் கட்டடத்தில் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் தம்பதியினர் பொதுச்சுடரை ஏற்றினர். அதனைத் தொடர்ந்து தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா தலைமையில் நடந்த விழாவில் 17 சட்டவாளர்களுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பட்டங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் தமிழீழ மேன்முறையீட்டு நீதியரசர் சுகிர்தரன், தலைமை நீதியாளர் ஒப்பிலான் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான அருள் மாஸ்டர், தமிழன்பன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஐ-3-5)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.6மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.



NSB
NSB தேசிய சேமிப்பு வங்கி

# தமிழீழ சட்டக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில்....











தமிழீழ சட்டக் கல்லூரியின் நான்காவது அணி மாணவர்களின் பட்டமளிப்பு விழா நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். பட்டம் பெற்ற சட்டவாளர்களுடன் சு.ப.தமிழ்ச்செல்வன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

*(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## தெற்கு அரசியல் நெருக்கடியால் வட.-கிழக்கு பாதிக்கப்படக்கூடாது!

### ஜப்பான் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.26

உதவிவழங்கும் நாடுகள் வாக்களித்த உதவி வடக்கு - கிழக்கிற்கு வழங்கப்பட்டே ஆகவேண்டும். புலிகளும் வடக்கு - கிழக்கு மக்களும் பாதிக்கப்படக்கூடாது. ஏனெனில், இன்றைய அரசியல் நெருக்கடிக்கு அவர்கள் காரணமல்லர்.

- இப்படி ஜப்பான் அரசின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி நேற்று தாம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அகாஷி மேற்கண்டவாறு கூறினார்.

இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக வடக்கு - கிழக்கிற்கான உதவித்தொகைகளை வழங்காமல் விடுவதற்கு உதவி வழங்கும் நாடுகள் தீர்மானித்துள்ளனவா என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அகாஷி ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

உதவித்தொகைகளை வழங்கும் மார்க்கம் பற்றி இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று அகாஷி கூறினார்.

"இடைக்கால நிர்வாகத் திட்டம் பற்றிப் பேசி முடிவுகாணும் வரை பொறுத்திருக்காமல் வடக்கு - கிழக்கு அபிவிருத்தியைத் துரிதமாக மேற்கொள்ள ஒரு திட்டம் தயாரிக்கபபட வேண்டும் என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் என்னைக் கேட்டுக்கொண்டார். அது பற்றியும் ஆலோசித்து வருகின்றோம்" என்று அகாஷி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## நெல்லியடியில் நேற்றும் விபத்து: ஒரே குடும்பத்தவர் மூவர் காயம்!

வடமராட்சி,ஜன.26

நெல்லியடியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற கார்-மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுமி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் கட்டைவேலி தொலைத் தொடர்பு நிலையத்துக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மண்டானைச் சேர்ந்த நல்லதம்பி பகவதி (வயது35), வேலும் மயிலும் சர்மிளா (வயது8), கே.வேலும் மயிலும் ஆகியோர் காயமடைந்தனர். இவர்களில் வேலும்மயிலும் பகவதி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஏனையோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வல்லிபுரக் கோயிலுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த சமயம் எதிரே வந்த காருடன் மோதியதில் விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

காயமடைந்தவர்கள் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது அங்கு அவர்களுக்கு துரிதமாக சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-36-173-70)

## போலிக் கடவுச்சீட்டுடன் இலங்கை வாலிபர் கைது!

சென்னை,ஜன.26

போலிக்கடவுச்சீட்டில் இலங்கைக்கு 17 முறை சென்றுவந்த கடத்தல் கும்பல் தலைவன் எனக்கூறப்படும் இலங்கை வாலிபர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கொழும்புக்கு விமானத்தில் செல்ல இருந்த பயணிகளிடம் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் திடீரென்று சோதனை நடத்தினர்.

அப்போது சந்தேகத்தின்பேரில் இலங்கை வாலிபர் ஒருவரை அதிகாரிகள் பிடித்து விசாரணை நடத்தினார்கள். அவரது கடவுச்சீட்டை அதிகாரிகள் கைப்பற்றிப் பார்த்தபோது அது போலியானது என்பது தெரியவந்தது. அவர் மறைத்து வைத்திருந்த 2 ஆயிரம் அமெரிக்க டொலர்கள், 2 ஆயிரத்து 115 ஐரோப்பிய நாட்டு நோட்டுக்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

பிடிபட்ட வாலிபரிடம் விசாரணை நடந்து வருகிறது. அவருக்கு அதிகாரிகள் யாரும் உதவினார்களா? என்பது குறித்தும் விசாரணை நடந்து வருகிறது.

### பெப்ரவரி 2ஆம் திகதியே ஹஜ் பெருநாள்

## விடுமுறை தினத்தை மாற்றியமைக்க உலமா சபை பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு,ஜன.26

புனித ஹஜ் பெருநாளை எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி கொண்டாடுவதென அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை தீர்மானித்திருக்கிறது.

நாட்டின் எந்த ஒரு பாகத்திலும் கடந்த 22ஆம் திகதி தலைப்பிறை தென்பட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைக்கப்பெறாததால் துல்'.தா மாதத்தை 30 தினங்களாகக் கொண்டு புனித ஹஜ் பெருநாளை பெப்ரவரி 2ஆம் திகதி கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதையடுத்து, ஹஜ் பெருநாளை முஸ்லிம்கள் பெப்ரவரி 2ஆம் திகதி கொண்டாடுவதற்கு வசதியாக ஹஜ் பெருநாள் விடுமுறை தினத்தை அத்தினத்துக்கு மாற்றியமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உலமா சபை கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. கலண்டர்களில் ஹஜ் விடுமுறை தினம் பெப்ரவரி முதலாம் திகதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பெப்ரவரி முதலாம் திகதி என இருக்கும் ஹஜ் விடுமுறையை 2ஆம் திகதி என அறிவிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணிக்குமாறு உலமா சபையின் தேசிய பொதுச் செயலாளர் அஸ் - ஷெய்க் எச்.அப்துல் நஸார் பிரதமரை கோரியிருக்கிறார். இக்கடிதம் ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## இந்தியாவில் தீவிர பாதுகாப்பு; இன்று குடியரசு தினக் கொண்டாட்டம்

### செங்கோட்டை உட்பட முக்கிய இடங்கள் 'சீல்'

புதுடில்லி,ஜன.26

இந்திய குடியரசு தினத்தையொட்டி தீவிரவாதிகள் நாச செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தியா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. டில்லியில் செங்கோட்டை உட்பட முக்கிய இடங்கள் 'சீல்' வைக்கப்பட்டுள்ளன.

இந்திய குடியரசுதினம் இன்று கொண்டாடப்படுகிறது. குடியரசு தினக் கொண்டாட்டத்தைச் சீர்குலைக்கும் நோக்கில் தீவிரவாதிகள் வன்முறைச் செயல்களில் ஈடுபடலாம் என்று புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர். குறிப்பாக, தலைநகர் டில்லி, காஷ்மீர் மற்றும் வடக்கு - கிழக்கு மாநிலங்களில் தீவிரவாதிகள் கைவரிசை காட்டக்கூடும் என்று அஞ்சப்படுவதால் அங்கு பாதுகாப்புப் படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

டில்லியில் இன்று ராஜ்பாத்தில் குடியரசுத் தின ஊர்வலம் நடக்கிறது. ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி மற்றும் பல தலைவர்களும், சிறப்பு விருந்தினராக பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனோசியோ லுலா டிசில்வா ஆகியோர் இந்தக் கணகவர் நிகழ்ச்சியைக் கண்டுகளிக்கிறார்கள். எனவே, ராஜ்பாத்தில் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இங்கு மட்டுமன்றி, இந்தியா கேட் மற்றும் செங்கோட்டை ஆகிய பகுதிகள் 'சீல்' வைக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான பாதுகாப்புப் படையினர் இரவு பகலாக தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், நட்சத்திர ஹோட்டல், சுற்றுலா இடங்கள் மற்றும் சில முக்கிய பொது இடங்களில் ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அணிவகுப்பைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் கட்டடங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க, அந்தப் பகுதியைச் சுற்றி 8 கி.மீ. தூரத்திற்கு உள்ள உயரமான கட்டடங்களைப் பாதுகாப்புப் படையினர் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளனர்.

## வெலிகம பகுதியில் தாயும் மகனும் ஆயுதக் குழுவால் சுட்டுக்கொலை!

வெலிகம, பண்டாரமுல்ல என்ற இடத்தில் ஆயுதம் தரித்த ஒரு குழுவினர் ஒரு வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இருவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு 10.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில வீட்டிலிருந்த ஒரு தாயும் மகனுமே இறந்துள்ளனர் என்று வெலிகம பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இறந்தபெண் 56 வயதுடையவர் எனவும் அவரது மகன் 33 வயதுடையவர் எனவும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறே இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணமாக இருக்கலாம் எனவும், இது தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் கூறியிருக்கின்றனர்.

பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

# திருமணத்தில் தீ: ஆதரவற்றுப்போன மணமகள்!

திருச்சி,ஜன.26

தமிழகத்தின் திருச்சி நகரத் திருமண மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த தீவிபத்தில் தனது குடும்பத்தில் பெரும்பாலானவர்களை இழந்து ஆதரவற்ற நிலையில் உள்ளார் மணமகள் ஜெயஸ்ரீ (வயது 34).

ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீ பத்மப்பிரியா கல்யாண மண்டபத்தில் நேரிட்ட இந்த விபத்தில் ஜெயஸ்ரீயின் தாய் சுசீலா, தந்தை ஹனுமந்தராவ், மூத்த சகோதரி புவனா, 2ஆவது சகோதரி கலாவின் மகன் ஸ்ரீவத்சன் ஆகியோருடன் மணமகன் குருராஜனும் பலியானார்.

விபத்தில் காயமுற்று தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் ஜெயஸ்ரீ அதிர்ச்சியில் இருந்து இன்னமும் முழுமையாக மீளவில்லை. இந்நிலையில் அவரது குடும்பத்தினர் 4 பேர், மணமகன் குருராஜன் ஆகியோர் இறந்த செய்தியைக் கூறினால் மன நிலை பாதிப்படையலாம் என்பதால் அதுபற்றிக் கூற மருத்துவர்கள் அனுமதிக்கவில்லை.

தீவிர சிகிச்சையால் சனிக்கிழமை பேசும் அளவுக்கு முன்னேறிய ஜெயஸ்ரீ விபத்துப் பற்றி விசாரித்துக் கொண்டே இருக்கிறார். முதலில் மற்றவர்கள் வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறிவந்த அவரது உறவினர்கள் தற்போது குடும்பத்தினர் பெரும் பாலானோரைக் காணவில்லை தேடிக்கொண்டிருக்கின்றோம் எனப் பலவாறாக அவரது கவனத்தைத் திருப்பி வருகின்றனர்.

ஸ்ரீரங்கம் மல்லிகைபுரம் அக்ரஹாரத்தைச் சேர்ந்த அனுமந்தராவ் (74) சுசீலா (62) தம்பதியின் 4ஆவது மகள் ஜெயஸ்ரீ.

அனுமந்தராவ் கஷ்டப்பட்டு மூத்த மகள் புவனாவுக்கு மணமுடித்து வைத்தார். அடுத்த மகள்மாரை எப்படிக் கரையேற்றப் போகின்றோம் என்ற விரக்தியில் இருந்த அவரைத் தேற்றிய ஜெயஸ்ரீ குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பையும் ஏற்றார்.

திருச்சி சரோஜா கஜ்தூரிரங்கன் நடுநிலைப் பள்ளியில் ஜெயஸ்ரீ ஆசிரியையாகச் சேர்ந்தார். தனது இரண்டு சகோதரிகளான கலா, லதா ஆகியோரது திருமணத்துக்குப் பணம் சேர்ப்பதற்காக மாலையில் பிரததியேக வகுப்புகளை நடத்தினார். இந்த வருமானம் போதாததால் கடன் வாங்கி இரண்டு சகோதரிகளின் திருமணங்களை முடித்துவைத்தார். ஜெயஸ்ரீயின் திருமணத்தையும் முடித்துப் பார்த்துவிட வேண்டும் என எண்ணினார் அனுமந்தராவ். முதல் கடனை அடைப்போம். அதன் பின்னர் திருமணத்தைப் பற்றி யோசிக்கலாம் என்று கூறியுள்ளார் ஜெயஸ்ரீ.



கடன் அடைபட்ட நேரத்தில் ஜெயஸ்ரீயின் வயது 34ஐ எட்டிவிட்டது. இதை உணர்ந்த அனுமந்தராவ் இனியும் காலங்கடத்தாமல் மகளின் திருமணத்தை முடிக்கத் திட்டமிட்டார். அதன்படி குருராஜனுக்கும் ஜெயஸ்ரீக்கும் ஓராண்டுக்கு முன் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இரு குடும்பத்தினருமே உடனடியாகத் திருமணம் நடத்த விரும்பவில்லை.

திருமணம் ஆனாலும் தான் வாங்கிய கடனைத் தனது வருமானத்திலேயே அடைக்க ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற ஜெயஸ்ரீயின் கோரிக்கையை குருராஜன் ஏற்றுக்கொண்டார். அந்தக்கடனை அடைக்கத் தானும் உதவுவதாக அவர் உறுதி அளித்துள்ளார். இது அவர் மீது ஜெயஸ்ரீ வைத்திருந்த மதிப்பு, மரியாதையை மேலும் அதிகப்படுத்தியது. தனது திருமணத்துக்காக உடன் பணிபுரியும் ஆசிரியைகள், உறவினர்களிடம் கடன் வாங்கியுள்ளார் ஜெயஸ்ரீ. இந்த நிலையிலேயே ஜெயஸ்ரீயின் திருமண நிகழ்வில் அனர்த்தம் ஏற்பட்டது.

மணமகன் குருராஜன் இறந்ததை அறியாமல் தான் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைக்கு அழைத்து வந்து அவருக்குச் சிகிச்சை அளிக்குமாறு வற்புறுத்தி வருகிறார் ஜெயஸ்ரீ.



தாய்லாந்தின் பாங்கொக் நகரில் புதிய உலக சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தாய்லாந்து மன்னரின் 72ஆவது பிறந்த நாளையொட்டி 'பரசூட' வீரர்களின் சாகச நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 672 'பரசூட்' வீரர்கள் ஒரே நேரத்தில் விமானத்தில் இருந்து பரசூட்டுகள் மூலம் குதித்து சாதனை ஏற்படுத்தினார்கள்.

ஒரேநேரத்தில் 672 வீரர்கள் 'பரசூட்' மூலம் குதித்து சாதனை ஏற்படுத்தியமை இதுவே முதல் தடவை. இதற்கு முன் 372 வீரர்கள் அமெரிக்காவில் இதேபோல் சாதனை ஏற்படுத்தி இருந்தனர்.

அந்தச் சாதனை இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது. இப்போது சாதனை ஏற்படுத்திய 672 பேரில் 250 பேர் தாய்லாந்தைச் சேர்ந்தவர்கள். மீதி உள்ளவர்கள் அமெரிக்கா, சீனா, பிரேஸில் பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். 7 விமானங்களில் இருந்து வீரர்கள் குதித்தபோது பலமான காற்று வீசியதால் சில வீரர்கள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டு மரங்களிலும் உயரமான கட்டடங்களிலும் சிக்கினார்கள்.

# 'ஒப்பர்சூனிட்டி' ஆய்வுக்கலமும் செவ்வாயில் தரை இறங்கியது!

பஸடெனா,ஜன.26

நாஸாவின் 'ஒப்பர்சூனிட்டி' ஆய்வுக் கலமும் செவ்வாய்க் கிரகத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. ஜி.எம்.ரி. நேரப்படி 5.05இற்கு (இலங்கை நேரப்படி நேற்றுமதியம் 11.05) அது செவ்வாயின் தென் துருவத்தில் பத்திரமாகத் தரையிறங்கியது. திட்டமிட்டபடியே 'ஒப்பர்சூனிட்டி' தரையிறங்கிவிட்டது என்று நாஸா ஆய்வுமையம் அறிவித்திருக்கிறது.

கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி விண்வெளியில் ஏவப்பட்ட இந்த ஆய்வுக்கலம் ஏழு மாதகாலப் பயணத்தின்பின் செவ்வாயைச் சென்றடைந்திருக்கிறது.

எதுவித சிரமமுமின்றி அது தரையிறங்கியதாக அந்த ஆய்வுக் கலத்தின் இயந்திரத் தொகுதி கட்டுப்பாட்டாளர் கூறியிருக்கிறார்.

'ஒப்பர்சூனிட்டி' இறங்கிய இடம் அதிக வெப்பமுள்ள பகுதி என்பதால் அது தரையிறங்கும்போது தீப்பற்றிக் கொள்ளாமல் இருப்பதற்கு ஏற்றவசதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தரையிறங்கியவுடனேயே அது செவ்வாயின் தரைத்தோற்றத்தினையும் தரையிறங்கிய பகுதியையும் படம்பிடித்து அனுப்பியிருக்கிறது.

4 ஆயிரத்து 500 அடி உயரமுள்ள பகுதியிலேயே அது தரையிறங்கியுள்ளது. 'ஸ்பிரிட்' ஆய்வுக்கலம் தரையிறங்கிய இடத்திலிருந்து 10 ஆயிரத்து 620 கி.மீ. தூரத்தில் இந்தப் பகுதியுள்ளது.

'ஸ்பிரிட்' எவ்வாறு செவ்வாயின் தரையில் நகர்ந்து ஆராய்ச்சி செய்தது போலவே ஆறு சக்கரங்களைக் கொண்ட இந்த ஆய்வுக்கலமும் செவ்வாயின் தரையில் நகர்ந்து சென்று ஆய்வை மேற்கொள்ளும்.

இதற்கிடையே -

செவ்வாயின் தரைத்தோற்றத்தை ஆய்வுசெய்து கொண்டிருந்த 'ஸ்பிரிட்' ஆய்வுக் கலம் குறித்து நாஸாவின் பொறியியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை ஜி.எம்.ரி. நேரப்படி 12.34 இற்கு அது மீண்டும் பூமியுடன் தொடர்பு கொண்டது. ஸ்பெயின் நாட்டின் மட்ரிட் நகரில் அமைந்துள்ள, சர்வதேச தொலைதூர விண்வெளி ஆய்வுக் கட்டமைப்பின் அன்ரெனா, அந்தத் தகவல்களைக் கிரகித்தது. அத்தொடர்பு பத்து நிமிடங்களுக்கு மட்டுமே நீடித்தது. அதன்பின், மீண்டும் அதனூடான தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது.

# அ.தி.மு.க. வேட்பாளராக கட்டணம் 15 ஆயிரம் ரூபா

சென்னை,ஜன.26

இந்திய நடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பக் கட்டணமாக ரூபா 15 ஆயிரம் செலுத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முதல்வருமான ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்பும் அ.தி.மு.கவினர் எதிர்வரும் புதன்கிழமை காலை முதல் பெப்ரவரி 5ஆம் திகதி மாலை வரை தலைமைக் கழகத்தில் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்ப படிவங்களைப் பெற்று, பூர்த்திசெய்து வழங்கலாம்.

அ.தி.மு.க. சார்பில் வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் 15 ஆயிரம் ரூபா கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்கவேண்டும் என்றுள்ளது.

# ஈராக்கில் ஆயுதச் சோதனை நடத்திய அமெ.குழுத் தலைவர் இராஜினாமா!

வாஷிங்ரன்,ஜன.26

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா? என்பதைக் கண்டறிய நியமிக்கப்பட்ட அமெரிக்க ஆயுதச் சோதனைக்குழுவின் தலைவர் டேவிட்கே தனது பதவியை திடீரென இராஜினாமாச் செய்தார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தன என்பதை நியாயப்படுத்த துடித்துக்கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிற்கு இவரது திடீர் இராஜினாமா நேரடியாகச் சவால் விடுப்பதாக அமைந்துள்ளது.

ஈராக்கில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் பேரழிவு ஆயுதம் எதுவுமே கண்டுபிடிக்கப்படவில்லை, இனியும் அவ்வாறான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படாது என்று அடித்துக்கூறும் டேவிட் கே, தனது ராஜினாமாக் குறித்து வாஷிங்ரனில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

வளைகுடா போரிற்குப் பின் ஈராக், பேரழிவு ஆயுதங்களைத் தயாரித்து பதுக்கி வைத்திருப்பதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. இதனால்தான், ஈராக் மீதான போரும் ஆரம்பமானதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், எனது தலைமையிலான குழுவினர் ஈராக்கில் பல மாதங்களாக நடத்திய சோதனையின் பின்னர் அங்கு பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்ற முடிவுக்குவந்திருக்கிறோம்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்ததை ஐ.நா. ஆயுதக்கண்காணிப்புக் குழுவின் முன்னாள் அதிகாரியான சாள்ஸ் டப்லர் உறுதிசெய்திருக்கிறார் என்று அமெரிக்கா தெரிவித்திருந்தது. இதுகுறித்து எனக்கு எதுவுமே தெரியாது, ஆனால், சாள்ஸ் டப்லர் கூறினார் என்று அமெரிக்க புலனாய்வுத்துறை கூறியிருப்பது, ஜனாதிபதி புஷ் அரசுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுக்கலாம்- என்று கூறினார்.

டேவிட் கே தனது பதவியை திடீரென ராஜினாமாச் செய்திருப்பது குறித்து உடனடியாக உத்தியோகபூர்வமான அறிக்கைகள் எதனையும் அமெரிக்கா வெளியிடவில்லையாயினும் அமெரிக்க அதிகாரிகள் சிலர் டேவிட் கேயின் பணிக்காலத்தை விமர்சித்துள்ளனர்.

ஈராக்கில் ஆறுமாதங்களுக்கும் மேலாக சோதனை நடத்திய ஐ.நா. ஆயுதச்சோதனைக் குழுத் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸும், அங்கு பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று கூறியிருந்தமை கூறிப்பிடத்தக்கது.

ஆனால், எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தன என்பதை நியாயப்படுத்த ஜனாதிபதி புஷ் ஆர்வங்காட்டி வருகிறார் என்று கூறப்படுகிறது.

# தலிபான் தலைவரின் சகா பாக். பொலீஸாரால் கைது!

இஸ்லாமாபாத்,ஜன.26

தலிபான் தலைவர் முல்லாமுகமட் ஒமரின் நெருங்கிய சகா ஒருவரைத் தாம் கைதுசெய்துள்ளதாக பாகிஸ்தானியப் பொலஸார் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியின்போது மேற்குப்பகுதி பட்கிஸ் மாகாணத்தின் ஆளுநராகப் பதவிவகித்த மௌல்வி அப்துல் மனன் ஹவாஜாஜி என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். இவர் ஆப்கானிஸ்தானுடனான பாகிஸ்தானிய எல்லைப்பகுதியில் பிடிபட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் மீதான தீவிரவாதத் தாக்குதல்களில் ஹவாஜாஜி நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தார் என்று ஆப்கானிஸ்தானிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

பாகிஸ்தானில் இதுவரை கைது செய்யப்பட்ட தலிபான்கள் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டனர், இது போன்று ஹவஜாஜியும் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படுவாரா என்பது குறித்து பாகிஸ்தானிய அதிகாரிகள் கருத்துத்தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

தலைமறைவாக உள்ளவர்களான சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின் லேடன், தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமர் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களில ஹவாஜாஜியும் ஒருவர் என்று கூறப்படுகிறது. (ஓ)

## 16 இந்திய மீனவர் பாக். கடலில் கைது!

பாகிஸ்தான் கடற் பகுதியில் சட்ட விரோதமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த 16 இந்திய மீனவர்களை பாகிஸ்தானியக் கடலோரக் காவல்படை கைது செய்தது. இவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டதாக கராச்சியில் பொலீஸார் தெரிவித்தனர்.

# முஸ்லிம் லீக்குக்கு வேலூர் தொகுதி

தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு வேலூர் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீன் ஆகியோர் இது தொடர்பான ஒப்பந்தத்தில் நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டனர்.

தற்போது, வேலூர் தொகுதி எம்பியாக பா.ம.கவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் என்.டி.சண்முகம் உள்ளார்.

வேலூர் அல்லது அரக்கோணம் தொகுதி பா.ம.கவுக்கு ஒதுக்கப்படும் என்று கருணாநிதி, ராமதாஸ் இடையே வெள்ளிக்கிழமை ஒப்பந்தம் கையெழுத்தானது. ராமதாஸுடன் கருணாநிதி சனிக்கிழமை பேசியதை அடுத்து, வேலூர் தொகுதி முஸ்லிம் லீக் கட்சிக்கும், அரக்கோணம் தொகுதி பா.ம.கவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது.

# பெண்ணின் வயிற்றில் 80 கிலோ கட்டி

ருமேனியா நாட்டைச் சேர்ந்த பெண் ஜசீக்கா பங்கஜ் கடந்த 25 ஆண்டு களாக வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்தார். மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து பார்த்ததில் அந்தப் பெண்ணின் வயிற்றில் ஒரு கட்டி வளர்ந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆரம்பித்திலேயே இந்தக் கட்டியை சத்திரசிகிச்சை செய்து அகற்றவும் மருத்துவர்களால் முடியவில்லை. ரத்த நாளம் அதிகமாக இருக்கும் பகுதியில் இந்தக்கட்டி இருப்பதால் மருத்துவர்கள் சத்திர சிகிச்சை செய்யத் தயங்கினார்கள். இப்போது அந்தப் பெண்ணுக்கு சத்திரசிகிச்சை செய்து கட்டியை அகற்றி இருக்கிறார்கள் மருத்துவர்கள். அந்தக் கட்டியின் எடை 80 கிலோ. இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகள் தாமதித்து இருந்தால் அந்தக் கட்டி 100 கிலோ எடையை தாண்டியிருக்கும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்தக் கட்டியை அகற்றும் சத்திரகிசிக்சை 10 மணி நேரம் நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்
துறையின் உத்தியோகத்தரும்,
இருபாலை, வேளாதோப்பு
ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்பாள் ஆலய
நிர்வாக சபைத் தலைவரும்
இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச்
சங்க உப செயலாளரும்,
சிறந்த சமூக சேவையாளருமான

## திரு. மயில்வாகனம் நந்தீஸ்வரன்

அவர்கள் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிபதி திருமதி S.நந்தசேகரன் முன்னிலையில் கடந்த 09.01.2004 அன்று சத்தியப்பிரமாணம் செய்துள்ளமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு. அவர் சேவை மேன்மேலும் தொடரவும் உயர்வுபெறவும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி இறைவனை வேண்டுகின்றோம்.

*சித்தமருத்துவத்துறை, கைதடி,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

**உத்தியோகத்தர்கள்.**

(27630)(24-18-11-34)

# நீங்காத ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
06
✦
01
✦
1962



உதிர்வு
06
✦
02
✦
2003

## சின்னையா இராமன்

*திதி: 26.01.2004*

அன்பின் இருப்பிடமே! பண்பின் உறைவிடமே!
காலமெல்லாம் எம்மைக் காத்த குலவிளக்கே!
கணப்பொழுதில் எம்மைக் கலங்க வைத்துவிட்டு
எங்குதான் சென்றீரோ? ஏனையா பிரிந்தீர்?
உம் நினைவால் தினமும் தவிக்கின்றோம் நாம்!
*ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
இணுவில்.

**அன்பு மனைவி,**
**சகோதரர்கள்.**

(27642) (24-34-16-17)

# எங்கள் நினைவில் முப்பத்தொரு நாள்கள்

அன்னை
மடியில்
05
03
1931



ஆண்டவன்
அடியில்
27
12
2003

## பரமு சுப்பையாபிள்ளை

(இரத்தினம்)

இசையுலகு இணுவையென்று இவ்வுலகம் போற்றுதல்போல்
இவ்வூரில் நீர் பிறந்து இல்லறத்தை இன்பமாக்கி - ஐயா
பண்ணோடு தேவாரம் பல தலங்கள் நீர் பாடி
நல்லூர் கந்தனுக்கும் நடை தூரம் பஜனை செய்து
ஆலயம் தோறும் அரிய பல தொண்டாற்றி
அன்னை சிவகாமியுடன் அனுதினமும் நீர் இருந்து
ஆற்றிய தொண்டெல்லாம் உம்மோடு நின்றுபோனதே - ஐயா
ஆண்டு பல வந்தாலும் ஆறாது உம் துயரம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (26.01.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*விவேகானந்த வீதி,*
*மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.*

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(27631)(34-18-11)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்







## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3292148 இருந்து
3308602 வரை
சீட்டிழுப்பு இல. 1473
திகதி 24.01.2004

## வெற்றி எண்கள்

**15 18 22 32 45**

போனஸ் எண் **27**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 86 | 10,000/- | 860,000/- |
| 3 | 4,991 | 500/- | 2,495,500/- |
| 2 | 85,680 | 20/- | 1,713,600/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 15ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 104,487 | 10/- | 1,044,870/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,413,970/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.2,308,100/-**

தொடர் இல. 2338376க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 28ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
தங்கப்பரிசு வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3306011-4-03**
**3297072-6-66**
**3294037-7-12**
**3299105-4-52**
**3302795-1-26**

PHOENIX O&M

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 546 |
|---|---|
| திகதி | 23.01.2004 |

| டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
|---|
| செல்லுபடியாகும் தொடர் இல. 5461197-5475907 |

வெற்றி இலக்கங்கள் **08 27 32 38**




லக்கினம்

கும்பம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்பட்டது.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 318,077 | 10 | 3;180,770 |
| 2 இலக்கங்கள் | 29,178 | 20 | 583,560 |
| 1 இல + லக்கினம் | 28,835 | 30 | 865,050 |
| 2 இல + லக்கினம் | 2,664 | 100 | 266,400 |
| 3 இலக்கங்கள் | 762 | 500 | 381,000 |
| 3 இல + லக்கினம் | 79 | 5,000 | 395,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 379,600 | - | 7,071,780 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.7,071,780/-

தொடர் இல. 4490137க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 27ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
முச்சக்கர வண்டி வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5466869-0-71**
**5467485-7-42**
**5472571-0-26**
**5468873-9-51**
**5463228-8-36**

PHOENIX O&M

# உதயன்

## போரை நோக்கிப் புலிகள்?

புதிய ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் வாங்கிக் குவிக்கும் நோக்குடன் வெளிநாட்டில் பெருத்த எடுப்பில் நிதி திரட்டும் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் ஆரம்பித்திருக்கின்றார்கள். - இவ்வாறு வெளிநாட்டிலிருந்து கிடைகக்கும் உளவுத்தகவல்கள் தெரிவிக்கின்றன என்று கொழும்புப் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் அரசியல் குழப்பங்கள் போரைத் தவிர்க்க முடியாதனவாக்கி வருகின்றன என்று தெரிவிக்கும் வகையில் வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் பிரசாரங்கள் அமைந்திருக்கின்றன என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றனவாம்.

பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு உள்ளிட்ட முக்கிய மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரென பறித்துத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததை அடுத்தே, புலிகளின் போக்கில் பெரும் மாற்றம் காணப்படுவதாகவும் உளவுத்தகவல்கள் தெரிவித்திருக்கின்றன.

கடந்தவருடம் வெளிநாடுகளில் விநியோகிக்கப்பட்ட புலிகளின் பெரிய நாட்காட்டிகளில் (கலண்டர்களில்) சாதாரண உடையில் மீசையின்றி சாந்தமாகப் பிரபாகரன் தோற்றமளிக்கும் படம் காணப்பட்டதாகவும், ஆனால், இம்முறையோ அதற்கு மாறாக இராணுவச் சீருடையில் மீசையுடன் தலைவர் பிரபாகரனின் படம் காணப்படுவதாகவும் குறிப்பிடும் தென்னிலங்கைப் பத்திரிகைகள், இம்மாற்றம் கூட வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு விசேட செய்தியைத் தருகின்றது என்றும் கூறுகின்றன.

கடந்தவருடம் அமைதியை நாடிய புலிகளின் தலைவர் இவ்வருடம் வேறுவழியின்றி யுத்தமே வழி என்பதை இந்தத் தோற்ற மாறுதல் மூலம் சொல்லாமல் சொல்லுகின்றார் என்று தென்னிலங்கைப் பத்திரிகைகள் விமர்சித்திருக்கின்றன.

இதில் உண்மை இருக்கலாம். அல்லது இல்லாமல் இருக்கலாம். அது வேறு விடயம்.

ஆனால், வேறு வழியின்றி யுத்தம் குறித்தும் சிந்திக்க வேண்டிய கட்டாயநிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டு வருகின்றார்கள் என்பது தான் உண்மை; யதார்த்தம்.

சிங்களப் பேரினவாதத்தை விடாது பற்றிப் பிடித்திருந்த இலங்கை அரசுகளுடன் விடுதலைப் புலிகள் சுமார் இரு தசாப்த காலம் யுத்தம் - அகோரச் சண்டை - கொடூரப் போர் புரிந்து வந்திருக்கிறார்கள். ஆனால், இந்தப் போர் நடந்த காலத்திலெல்லாம் இலங்கையில் ஜனாதிபதிப் பதவியும் அரசும் ஒரே கட்சிப் பக்கமே இருந்து வந்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஸ்ரீல.சு.க.தலைமையிலான கூட்டணியோ எதுவாயினும் நாடாளுமன்றப் பலத்தையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தையும் - இரண்டையும் ஒரே சமயத்தில் - ஒன்றாக வைத்துக் கொண்டுதான் புலிகளுடன் போர் புரிந்து வந்திருக்கின்றன.

1994 இல் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியாகவும் மாற்றுத் தரப்பான பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு ஆட்சிக் கட்டிலிலும் சொற்ப காலம் இருந்த போது யுத்தம் நடக்கவில்லை. சமாதான நிலையே நீடித்தது.

ஆக, சிங்களப் பேரினவாத ஆட்சி தங்களது அதிகார, அரசியல் ரீதியாகப் பிளவுபடாமல் ஐக்கியத்துடனும் வலுவுடனும் இருந்த போதுதான் புலிகளோடு யுத்தம் புரிந்தன. யுத்தம் தொடர்பான - தேவையான - சகல நடவடிக்கைகளையும் எடுக்கவும் நாட்டு வளத்தை யுத்தத்தை நோக்கி முழுமையாக திருப்பிவிடவும் அந்த வலிமை அரசுத் தரப்புகளுக்கு உதவி வந்துள்ளன.

இப்போது கொழும்பு அரசியல் தலைமையில் - அதிகாரம் - இரண்டாகப் பிளவுபட்டுப்போய் நிற்கின்றது. அதிகாரம ஜனாதிபதியிடமிருந்தாலும் யுத்த நடவடிக்கைக்குத் தேவையான நிதியிலிருந்து சகலவற்றுக்கும் நாடாளுமன்றத் தயவை நாடவேண்டிய நிலைமை.

இத்தகைய அதிகாரப்பிளவு நிலைமை எதிர்த் தரப்பில்- யுத்தம் புரிவதற்கு - புலிகளுக்கு மிக வாய்ப்பானது. ஆனால், எதிரி பலவீன நிலையில் இருக்கும் இச் சமயத்தில் கூட சமாதான முயற்சிகளின் மீது நம்பிக்கை வைத்து புலிகள் அமைதி காக்கின்றனர்.

தங்களின் தற்போதைய இந்தப் பலவீன நிலையைத் தாண்டும் காலம் வரை இந்தச் சமாதான முயற்சி நாடகத்தை ஆடிவிட்டு அதிகாரமும் பலமும் ஒரே அரசியல் தலைமையின் பக்கம் வந்து வலிமை கிடைத்ததும், சிங்களம் மீண்டும் யுத்தத்தை நோக்கித் திரும்பலாம்.

அது குறித்து முன்னெச்சரிக்கையாகப் புலிகள் எடுக்கும் நடவடிக்கைகளே இப்போது பலவாறாக அர்த்தப்படுத்தப்படுகின்றன போலும்!



பிரம்ம குமாரிகளின் ராஜயோகா நிலையத்தின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இராஜயோகினி மீரா நாகனந்தா ஆன்மீக விழிப்புணர்வு உரை நிகழ்த்துவதையும் இதில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## யாழ். நீதிமன்ற வளாகக் கட்டடத்தின் கட்டுமானப் பணி ஆரம்பிப்பதில் இழுபறி!

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற வளாகம் அமைக்கும் திட்டம் இழுபறி நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

யாழ். பிரதான வீதியில் உள்ள நீதி அமைச்சுக்குச் சொந்தமான காணியில் 9 கோடி ரூபா செலவில் நீதிமன்ற வளாகம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஈழத்தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கத்தக்க வகையில் இந்த வளாகம் கட்டப்படத் திட்டமிடப்பட்டது. இதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்டது.

இந்த வளாகத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச மட்டத்தில் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு, சர்வதேச நிறுவனம் ஒன்றுக்குக் கடந்த வருடம் செம்ரெம்பர் மாதம் ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தை அமைக்க 9 கோடி ரூபாவை வழங்க உலக வங்கியும் முன்வந்திருந்தது.

இந்தநிலையில், கட்டுமானப் பணிகளை நிறைவுசெய்ய 10 கோடி ரூபா தேவை என்றும் -

இதன் காரணமாகக் கட்டடப் பணிகளை ஆரம்பிக்கமுடியாது என்றும் - கட்டுமான நிறுவனம் நீதி அமைச்சுக்குத் தெரிவித்தது.

இந்த விவரத்தை நீதி அமைச்சு உலக வங்கியின் கவனத்துக்குக் கொண்டுவந்தது.

இது தொடர்பாக உலகவங்கி இதுவரை எந்தவித பதிலையும் அளிக்காததால் கட்டடப் பணிகளை ஆரம்பிப்பது இழுபறி நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

## அடுத்த தேர்தலில் போட்டியிட எமக்கு கூட்டமைப்பினர் இடம்தர வேண்டும்!

### காணாமற்போனோர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.26

அடுத்த தேர்தலில் போட்டியிட அன்னையர் முன்னணிக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் இடம் ஒதுக்கவேண்டும் என்று வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற் போனவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் சற்குணம் கோரியுள்ளார்.

நேற்றுக்காலை வேம்படி வீதியில் உள்ள அன்னையர் முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற காணாமற்போனோர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலின்போதே இந்தக் கோரிக்கையை சற்குணம் முன்வைத்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அன்னையர் முன்னணித் தலைவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இடம் வழங்கவேண்டும். இல்லையென்றால், நாம் வேறு கட்சிக்கு வாக்களிக்கவேண்டிய நிலை உருவாகும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போன எம் உறவுகளின் சரித்திரங்கள் குறித்துப் போதுமான அளவில் பேசவில்லை.

இதனால், சர்வதேச சமூகம் இலங்கை இராணுவத்தால் யாழ். மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை அறியமுடியாமற் போய்விட்டது. ஆகவேதான், எமது சங்கத்தின் உறுப்பினர் நாடாளுமன்றம் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காக எமது சங்க உறுப்பினர் தேர்தலில் போட்டியிட கூட்டமைப்பினர் இடம்வழங்க வேண்டும் என்று கோருகின்றோம்.

இதேவேளை, அடுத்தமாதம் முற்பகுதியில் காணாமற்போனோர் விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு ஜனாதிபதியை சந்திக்கவுள்ளோம். ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு அன்னையர் முன்னணியில் இருந்து பத்துப் பேரும் காணாமற்போனோர் சங்கத்தில் இருந்து பத்துப்பேரும் செல்லவுள்ளனர் - என்றார் அவர்.

(ஒ-7)

## சுதந்திர தினத்தன்று செயலகத்தில் காணாமற்போனோர் சங்கம் மறியல்!

### தேசியக் கொடி ஏற்றலைத் தடுக்கவும் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.26

இலங்கையின் சுதந்திர தினமான அடுத்த மாதம் நான்காம் திகதி வடக்கில் படையினரால் கைதாகிக் காணாமற்போனவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் யாழ். செயலகம் முன்பாக முன்னர் திட்டமிட்டபடி கறுப்புப்பட்டி அணிந்து மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

- காணாமற்போனோர் சங்கத்தின் செயலாளர் சற்குணம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தன்று யாழ். செயலகத்தில் காலை 7 மணி தொடக்கம் போராட்டத்தில் ஈடுபடுவதுடன் செயலகத்தில் தேசியக் கொடியேற்றும் நிகழ்வும் தடுத்து நிறுத்தப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பற்றிய தகவல்கள் இதுவரை இலங்கை அரசால் தரப்படாத நிலையில் சுதந்திர தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதில் அர்த்தமில்லை என்றும் -

அன்றையதினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்கவுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-7)

### நாளை

தை 13
செவ்வாய்க்கிழமை
(27.01.2004)
திதி : ஷஷ்டி
பின்னிரவு 12.41 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
பகல் 8.20 வரை
சுபநேரம்: 11.06 - 12.36
ராகுகாலம்: 3.36 - 5.06
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நாட்டுப் பற்றைவிட மதிப்புக்குரிய அன்பு வேறில்லை.

## வவுனியா ரயில் நிலையத்தில் முற்பதிவு செய்யமுடியாத நிலை

### குடாநாட்டுப் பயணிகள் விசனம்

வலி.வடக்கு.ஜன.26

குடாநட்டில் இருந்து கொழும்புக்குச் செல்லும் பயணிகள் வவுனியா ரயில் நிலையத்தில் உறங்கலிருக்கைக்கான முற்பதிவை மேற்கொள்ள முடியாத நிலைமை உள்ளதாகக் கூறப்படுகிறது.

வவுனியா ரயில் நிலையத்தில் உறங்கலிருக்கைக்கான முற்பதிவு காலை 7 மணிமுதல் 10.30 மணிவரையுமே இடம் பெறுகின்றது.

குடாநாட்டில் இருந்து வவுனியாவுக்கான பயண நேரம் குறைந்தது நான்கு மணித்தியாலங்கள் ஆகும். பயணிகள் அனுமதிப்பத்திரம் பெற்று மற்றும் சோதனை நடவடிக்கைகளுக்கு உள்ளாகிச் செல்வதால் இவ்வாறு அதிக பயண நேரம் ஆகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை செல்லும் முதல் பஸ்ஸில் பயணம் செய்தாலும்கூட பதினொரு மணிக்கே வவுனியாவை சென்றடையக் கூடியதாக உள்ளது. இதனால், கொழும்பு செல்வதற்காக ரயிலில் உறங்கலிருக்கை முற்பதிவு செய்யும் வாய்ப்பு குடாநாட்டிலிருந்து செல்பவர்களுக்குக் கிட்டாமல் உள்ளது.

உறங்கலிருக்கை பெறவேண்டுமாக இருந்தால் ஒரு நாள் முன்பாக வவுனியா சென்றால் மட்டுமே பெறலாம் என்ற நிலையே தற்போது உள்ளது.

ஆகவே, குடாநாட்டில் இருந்து செல்பவர்கள் உறங்கலிருக்கை பெற வவுனியா ரயில் நிலைய நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குடாநாட்டிலிருந்து கொழும்பு செல்பவர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-86)

## அனலைதீவுப் பெண்மணி வாந்திபேதியால் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜன.26

வாந்திபேதி நோய்க்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

எழுவைதீவைச் சேர்ந்த சிவநாதன் சுமதி (வயது 45) என்ற பெண்ணே மரணமானவராவார்.

கடந்த 21 ஆம் திகதி நள்ளிரவு திடீரென இவருக்கு வாந்திபேதி பாதிப்பு ஏற்பட்டது. போக்குவரத்து வசதியற்ற நிலையில் உடனடியாக இவரை மருத்துவமனையில் சேர்க்க முடியவில்லை. மறுநாள் காலை ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டார்.

ஆபத்தான நிலையில் காணப்பட்ட இவர், மேலதிக சிகிச்சையின் பொருட்டு அன்றையதினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட இவர், சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு உயிரிழந்தார். சடலம் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-15)

## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலை ஆசிரியர் க.இந்திரராசா
அவர்களின் தந்தை
**அமரர் வேலாயுதர் கந்தசாமி**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்.

(27559) (26-11-16-24)

## துயர்பகிர்கின்றோம்

எமது சனசமூக நிலைய ஆரம்ப உறுப்பினரும் புதிய கட்டட நிர்மாணத்தில் ஒத்துழைப்பு நல்கியவருமான
**நடராசா சோமஸ்கந்தராஜா**
அவர்கள இத்தாலியில் இயற்கையெய்தியமையையிட்டு நாம் கவலையும் அதிர்ச்சியும் அடைகிறோம். இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

பிரிவால் துயருறும் குடும்பத்தினரின்
துயரில் நாமும் பகிர்ந்து கொள்வதோடு,
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

*புது வீதி,*
*யாழ்ப்பாணம்*
(27625) (11-16-24)

**கொய்யாத்தோட்டம்,**
**சனசமூக நிலைய சமூகத்தினர்.**

உ
அம்பிகை துணை
ஏழாலை தெற்கு - களபாவோடை

## அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
## வருடாந்த மஹோற்சவப் பெருவிழா - 2004

அம்பிகை அடியார்களே!

மேற்படி அம்பிகையின் மஹோற்சவப் பெருவிழா நிகழும் சுபானு ஆண்டு தைத்திங்கள் 14 ஆம் நாள் (28.01.2004) புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெற அன்னையின் திருவருள் கைகூடியுள்ளது.

28.01.2004 புதன் - கொடியேற்றம்
03.02.2004 செவ்வாய் - வேட்டைத் திருவிழா
04.02.2004 புதன் - சப்பறத் திருவிழா
05.02.2004 வியாழன் - தேர்த் திருவிழா
06.02.2004 வெள்ளி - தீர்த்தத் திருவிழா

தினமும் காலை 7.00 மணிக்கு அபிஷேகம், 10.00 மணிக்கு மூலஸ்தானப்பூஜை, 11 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை என்பன நடைபெறும்.

தேர், தீர்த்தோற்சவ கால நேரவிவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

அம்பிகை அடியார்கள் அனைவரும் உற்சவ காலங்களில் அன்னையை வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெற்று இன்புறுவீர்களாக.

*10 நாள்களும் மாஹேஸ்வர பூஜை இடம்பெறும்.*

ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்
ஏழாலை தெற்கு, ஏழாலை.

(27600)(34-11-16-24)

சாவகச்சேரி வணிகர் மன்றப் பகுதியில்

# வாராந்த விடுமுறை தினங்களில் கடைகளை மூட நடவடிக்கை

தென்மராட்சி,ஜன.26

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணியுடனும் ஞாயிற்றுக்கிழமைகள் முழுநாளும் மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் இந்த நடைமுறை தீவிரமாகச் செயற்படுத்தப்படுமெனச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் இடம்பெற்ற சங்கப் பொதுக் கூட்டத்தில் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரை அடுத்து, சனிக்கிழமை அரை நாளும் ஞாயிற்றுக்கிழமை முழுநேரமும் வர்த்தக நிலையங்களை மூடுவதெனப் பொதுச் சபையில் முடிவுசெய்யப்பட்டது. இதற்கமையவே இந்த நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அரச, வர்த்தக விடுமுறை தினங்களிலும் வணிக நிலையங்களை மூடுவது தொடர்பாக சங்க நிர்வாக சபையினால் ஆராயப்பட்டு வருவதாகவும் -

இன்னும் ஓரிரு மாதங்களில் வர்த்தக விடுமுறை தினங்களில் வணிக நிலையங்களை மூட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## முறைசாராக் கல்வி குறித்த விவரங்கள் திரட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.26

குடாநாடு மற்றும் தீவகக் கல்வி வலயங்களில் முறைசாராக் கல்வி தொடர்பான விவரங்களைத் தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவையின் யாழ். அலுவலகம் திரட்டி வருகின்றது.

முறைசாராக் கல்வியில் சில கற்கைநெறிகள் மட்டுமே நடைமுறையில் உள்ளன. இவற்றைவிட பிரதேச வளங்களின் உச்சப் பயன்பாட்டினைப் பெறும் பயிற்சி வகுப்புக்களை வழங்குவதற்காகவே விவரங்கள் திரட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-7)

## கலைஞர்களுக்குக் கௌரவிப்பு

சுழிபுரம்,ஜன.26

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இசை நிகழ்ச்சி வழங்கிய தென்னிந்திய நாதஸ்வரக் கலைஞர்கள் ரி.என்.பாண்டியன், ரி.ரி.மாதவன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுடன் இணைந்து நிகழ்சியை வழங்கிய இணுவில் எஸ். கணேசு, சுழிபுரம் க.மோகனசுந்தரம் ஆகிய தவில் கலைஞர்களும் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.

(ஒ-28)

## ஆசிரியர் சேவை முன் பயிற்சி

வலிகாமம்,ஜன.26

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான ஆசிரியர் சேவை முன்பயிற்சி இம்மாதம் 31ஆம் திகதியில் இருந்து பெப்ரவரி மாதம் 8ஆம் திகதிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

புதிதாக நியமனம் பெற்றுள்ள 35 ஆசிரியர்கள் இந்த ஆசிரிய சேவை முன்பயிற்சிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ-152)

## இரண்டாம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

தோற்றம்
1930 - 04 - 03



மறைவு
2002 - 01 - 18

**திருமதி வாலாம்பிகை சபாலிங்கம்**
(மண்டைதீவு - 06)

அன்பின் ஒளி விளக்கே!
மந்திரமாய் மறைந்தாயே!
சந்தனத்தின் நறுமணமே
சிந்தையில் இருளம்மா
கண்ணீரில் சராண்டு
கரைந்து மறைந்ததுவே!
எண்ணாத நாளில்லை
இரங்காத போதில்லை
மீண்டும் வாராயோ
எம் குடும்ப ஒளி விளக்காய்?
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ~ நாம்
அடுத்த பிறவி எடுத்தாலும் விட்டுப் பிரியாது
உங்கள் நினைவுகள் அம்மா!

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*265/1, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(27267) (24-11-16)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் சுப மங்களகரமான சுபானு வருடம்
தை மாதம் 12 ஆம் நாள் இன்று (26.01.2004) திங்கட்கிழமை
பகல் 12.23 மணிமுதல 2.29 மணி (பழைய நேரம்) வரையுள்ள
சுப முகூர்த்த வேளையில்,

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**குபேரகாந்தன்**
(குபேரன்)
**(SWISS KALAI)**
அவர்களுக்கும்



எமது புதல்வி
திருநிறை செல்வி
**ஜபேலா**
(வேணி)
அவர்களுக்கும்

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 28.01.2004 புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி இராசலிங்கம் சரஸ்வதி
இல.14, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி தர்மலிங்கம்
செல்வநாயகி
மடத்தடி கிழக்கு வீதி,
சாவகச்சேரி.

(இருவீட்டார் அழைப்பு)

(24540)(36-11-16-24)


## O/L, A/L இற்குப் பின்னர் இனி என்ன?

ஏங்கி நிற்கும் மாணவர்களுக்கு!
இதோ உங்கள் கதவைத் தட்டுகிறது
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுக்கான கற்கைநெறி!

**இதோ இப்போது யாழ். நகரில்!**
**Association of Business Executives-Uk**

abe

**MBA கற்பதற்கான துரிதவழி இதுவே.**

இது தொடர்பான கருத்தரங்கு இன்றும் நாளையும் (26th & 27th January) இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள உதயன கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிமுதல் இடம்பெறும்.

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!
இக்கற்கை நெறிகளைக் கற்றவர்களுக்கு:
**பிரிட்டன் (UK), அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நியூஸிலாந்து**
போன்ற நாடுகளிலுள்ள பல பல்கலைக்கழகங்களில் அங்கீகாரம் கிடைக்கின்றது.
இது மட்டுமல்ல அங்கு கல்வியைத் தொடர பல விதிவிலக்குகளும் அளிக்கப்படுகின்றன.
சான்றிதழ் நிலை (Certificate Course)
டிப்ளோமா தரம் I,II (Diploma Level I&II)
உயர் டிப்ளோமா (Advanced Diploma) ஆகிய சான்றிதழ்களுக்கான கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன.
கல்வி சார்ந்த கடன்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.
பெப்ரவரி 2004இலிருந்து கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன.

**யூனிவென்சர்ஸ்**
**வணிக முகாமைத்துவக் கல்வி நிறுவனம்**
**UNIVENTURES INSTITUTE OF BUSSINESS MANAGEMENT**

தொலைபேசி இலக்கம்: 0777 - 715987
WWW.abeuk.Com.

(சி-32913) (21-11-16-24)

# யுனிவென்சர்ஸ் நிறுவனம் தரும் புதிய டிப்ளோமா கற்கைநெறிகள்

*ABE UK (ஐக்கிய இராட்சியம் இங்கிலாந்து - லண்டன்) MBA (Master of Business Administation) வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் பெறுவதற்கு துரித வழி இதுவே. "யுனிவென்சர்ஸ்" (unibentures) வணிக முகாமைத்துவக கல்வி நிறுவனம் இப்போது யாழ்ப்பாணத்தில்.*

இங்கிலாந்திலுள்ள, வணிகத் துறை நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் (Association of Business ESecutives U.K.) வழி நடத்தும் சர்வதேச அங்கீகாரம்பெற்ற பல்கலைக்கழகப் பட்டத்திற்குச் சமனான டிப்ளோமாக் கற்கைநெறிகளை, யுனிவென்சர்ஸ் வணிக முகாமைத்துவம் கல்வி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறது.

and Tourism), போக்குவரத்துறை (Trael) மற்றும் உபசரிப்பு முறைகள் பற்றிய கல்வி (Hospitality) போன்ற துறைகளில் பல்வேறு கற்கைநெறிகளை. ABE நிறுவனம் வழங்கி வருகின்றது. ஆரம்பப்பட்டங்கள் (First Degrees) முதல் MBA வரை பெறுவதற்கு, செலவு செய்யும் பணத்திற்கு சிறந்த பலனைத் தரக்கூடிய ஒரே வழி ABE தான்.

ABE-UK இன் இலக்குகள் பின்வருமாறு:-

▲ உலகளாவிய அளவில் வணிக முகாமைத்துவக் கல்வியில் முதல் தெரிவாக இருப்பது.

▲ எங்கள் பாடநெறிகள் மற்றும் சான்றிதழ்களின் தரத்திலும் விஸ்தீரணத்திலும் அதிக கவனம் செலுத்தப் படும்.

▲ வணிகம் தொடர்பான சாதகமான கற்கை அனுபவங்களை எமது அங்கத்தவர்களுக்கு வழங்குதல்.

▲ தரமான அங்கீகரிக்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் (U.K) சான்றிதழ்களை வழங்குதல்.

▲ நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கான சிறந்த வாய்ப்புக்களையுடைய உலகத்திற்கான வழியைத் திறந்து கொடுத்தல்.

▲ இந்த ஆயிரமாவது ஆண்டிற்கும் (Millennium) அதற்கு அப்பாலிற்குமான திறமையான பொறுப்பு வாய்ந்த முகாமைத்துவத்தை அளிக்கும் அதேவேளை நாளைய தேவைகளைச் சந்திப்பதும் கருத்தில் கொள்ளப்படும்.

*ஏன் ABE ஐத் தெரிவு செய்ய வேண்டும்?*

அநேக நாடுகளின் பல்கலைக் கழகங்களில், இரண்டாவது மற்றும் இறுதியாண்டிற்கான பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு, ABE வழங்கும் சான்றிதழ்கள் அங்கீகரிக்கபடுகின்றன. கைத்தொழிற்றுறையில் அனுபவமுள்ளவர்கள், முதுமாணிக்கற்கை நெறிகளை (Masters Programmes) அல்லது MBAயைக் கற்பதற்கு அனுமதி பெறமுடியும். ABE வழங்கும் டிப்ளோமாப் பட்டங்களைப் பெற்றவர்கள் பட்டப்படிப்பின் (Degree) இரண்டாவது ஆண்டில் நேரடியாகவே பிரவேசிக்க முடியும். ABEஇன் உயர்தர டிப்ளோமாவைப் பெற்றவர்கள் பட்டப் படிப்பின் இறுதியாண்டிலேயே நேரடியாகப் பிரவேசிக்கமுடியும். ABE யின் கற்கைநெறிகள் உலகெங்கிலுமுள்ள பல்வேறு கல்லூரிகளில் நடத்தப்படுவதால் மாணவர்கள் தமது சொந்த நாட்டிலேயே இதனைக் கற்க முடியும். இதனால் இங்கிலாந்து (UK), அமெரிக்கா (USA) போன்ற நாடுகளுக்குச்சென்று கல்வி கற்பதால் ஏற்படக்கூடிய செலவுகளைக் குறைக்க முடியும். இவ்வாறு மாணவர்கள் ஒரே நேரத்தில் இரண்டு தகைமைகளைப் பெறமுடியும். ABE வழங்கும் தொழில்சார் தகைமைகள் அதாவது, டிப்ளோமா, உயர் டிப்ளோமாவிற்கான சான்றிதழ்கள் மற்றும் பல்கலைக் கழகப்பட்டம் ஆகியன, தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒன்று அல்லது இரண்டு வருடங்களின் பின்னர் தமது கல்வியை மாணவர்கள் இடைநடுவில் கைவிட நேரிட்டாலும் அப்போது அவர்கள் பெற்றிருக்கும் தகைமைகள் வேலை கொள்வோரால் அங்கீகரிக்கப்படுவதற்குப் போதுமானதாகவிருக்கும்.

வளங்களின் பொதுவான முகாமைத்துவம், சந்தைகள் மற்றும் மனிதனின் அவசியம் (Human Potential) போன்றவற்றில், இக்கற்கை நெறி கூடியகவனம் செலுத்தி பல்வேறுவகையான தனியார் மற்றும் பொதுத் துறைப் பின்னணிகளில் முகாமைத் துவத்தை கற்பதையும் மற்றும் நடைமுறைப்படுத்துவதையும் ஆழமாக ஆராய்வதைத் தனித்துவமான சர்வதேச அம்சமாக இது கொண்டுள்ளது.

*இக்கற்கை நெறிகளில் எவ்வாறு இணைய முடியும்?*

சான்றிதழ் நிலை, டிப்ளோமா நிலை மற்றும் உயர் டிப்ளோமா நிலை என மூன்று வகையான தகைமைகளுக்கான தரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது!

சான்றிதழ் நிலையில் (Certificate level) இக்கற்கை நெறியைக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு அடிப்படைத் தகைமைகள் தேவையில்லை. எனினும், ஆங்கிலத்தில் அவர்கள் தகைமையுடையவர்களாக இருக்கவேண்டும் (சாதாரண தரத்தை (O.L) உடைய மாணவர்கள் உயர்தரம் (A/L) கற்றுக்கொண்டிருக்கும் போதே இக்கற்கை நெறியையும் கற்றுக்கொள்ள முடியும்) டிப்ளோமா நிலையில் (Diploma Level) இக்கற்கை நெறியைக் கற்க விரும்பும் மாணவர்கள், ABE வழங்கிய சான்றிதழ் நிலைக் கற்கை நெறிக்குரியசான்றிதழ் (அல்லது) உயர் தரத்தில் இரண்டு பாடங்கள் (Two 'A' Levls) (அல்லது) வேலைகொள்வோரின் (Employer) அத்தாட்சியுடன் கூடிய இதுதொடர்பான தொழிலில் (கற்கை நெறி தொடர்பான) குறைந்தது இரண்டு வருட அனுபவம். இவற்றில் ஏதாவது ஒன்றை அவசியம் பெற்றிருக்க வேண்டும்.

▲ உயர் டிப்ளோமா நிலையில் இக்கற்கை நெறியைக் கற்கவிரும்பும் மாணவர்கள், ABE இனால் வழங்கப்படும், வணிக நிர்வாகத்திற்கான டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். (அல்லது) அங்கிகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். (அல்லது) அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

▲ நீங்கள் விரும்பும் தொழில் தொடர்பான அறிவையும் திறமையும் வளர்க்க உதவும்.

▲ வாழ்க்கைக்கான புதிய கண்ணோட்டங்களையும் செறிந்த அறிவையும் வளர்க்க உதவும்.

▲ மேலதிகமான உயர்கல்வியை (உதாரணமாக MBA) பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தரும்.

▲ அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் தேவைகளுடன் இணைந்து போதல்.

### வணிக நிர்வாகம்

ABEஇன் வணிகத்துறை நிர்வாகக் கற்கைநெறி, தொழில்சார் தகைமைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. இதன்மூலம் நேரடியாக வணிகத் துறையில் தொழில் ரீதியாக ஈடுபட முடியும். (அல்லது) மேலதிக தொழில்சார் தகைமைகளுக்கான கல்வியைக் கற்பதற்கான அனுமதி யைப் பெற முடியும். (அல்லது) இங்கிலாந்து (U.K.) மற்றும் ஏனைய வெளி நாடுகளின் பல்கலைக்கழங்களில் வழங்கப்படும் வணிகத்துறை தொடர் பான கற்கை நெறிகளை கற்பதில் சில உபயோகமான விதிவிலக்குகளைப் (Exemptions) பெறமுடியும். மனித வலி முகாமைத்துவம் (Human Resource Management), நிதி மற்றும் கணக்கியல் (Finance and Accounting), சந்தைப்படுத்த லும் தகவல்தொழில்நுட்பமும் (Marketing and IT) ஆகியவை இக் கற்கைநெறி முழுவதும் முக்கியமாகக் கற்பிக்கப்படும் இக்கற்கை நெறியின் தொடரான ஒவ்வொரு நிலைகளிலும் இப்பாடங்கள் கற்பிக்கப்படும். இதனால் முக்கியமான இப் பாடங்களில் ஒன்று அல்லது பலவற்றில் மாணவர்கள் விசேடகவனம் செலுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. மேலும் மாணவர்களின் எதிர்காலத்திட்டம், அல்லது தனிப்பட்ட விருப்பத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தமது தெரிவுகளை அவர்கள் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

### வணிகத் தகவல் ஒழுங்கமைப்பு

**Business Information system**

இன்றைய நிலையில், தரவுப்பத்திரங்கள் (Spread sheets) தகவல் தளங்கள் (Data bases) மற்றும் இவை போன்ற கணனித் துறைசார்ந்த பல் பேறு உபகரணங்களைக் கையாண்டு வணிகத்துறையை அபிவிருத்தியடையச் செய்யக்கூடிய கணனித்துறை வல்லுநர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளவேண்டிய தேவை அதிகரித்துச் செல்கின்றது. இவ்விதம் வணிகத் தகவல் ஒழுங்கமைப்புத் துறையில் நிபுணத்துவச் சான்றிதழ் (Diploma in B.I.S and Advanced Diploma in B.I.S) பெற்றுள்ளவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் திறமையுடன் செயலாற்றக்கூடிய தகுதியைப் பெற்றுக்கொள்ள இயலும். இதன்மூலம் தகவல்தொழில் நுட்பத்துக்கும் வணிக நடவடிக்கைகளுக்கும் இடையே உறுதியானதும் அவசியமானதுமான தொடர்பு ஏற்படுத்தப்படுவதன் மூலம் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக முயற்சிகளுக்கிடையே இவர்களால் நெருங்கிய இணைப்பை உருவாக்கப்படமுடியும்.

இக்கற்கைத் திட்டம் கணனி அடிப்படைக்கல்வி, வலைப்பின்னல் அமைப்பு, சிறிய அளவிலான முறைமாற்ற ஒழுங்கமைப்பு, முகாமைத்துவ அடிப்படைத் தரவுகள், பகுப்பாய்வு விதிமுறைகள், இணையத்தள முறைமையில் அபிவிருத்தி, வெப்பதள கையாள்கை, வெப்பதள பாவனை வசதிகள் மற்றும் வெப்பதளமூலபக்க வடிவமைப்பு ஆகியன தொடர்பான பயிற்சிகளை வழங்குவதே முக்கிய நோக்கமாகக் கொண்டது.

### நிதி உதவித்திட்டங்கள்

பட்டப்படிப்பின் இறுதியாண்டு கற்றலுக்கு அல்லது எம்.பி.ஏ (MBA) கற்கை நெறிக்கும் தகுதிபெறும் மாணவர்கள் உள்நாட்டிலோ அல்லது வெளிநாடொன்றிலோ தமது கற்றல் நடவடிக்கைகள் தொடர்பான செலவீனங்களுக்கு இவ் யுனிவென்சரிஸ் வர்த்தக முகாமைத்துவக்கல்வி நிறுவனத்தின் உதவியை நாடிப் பெற்றுக் கொள்ள இயலும்.

இவ்வித ABE கல்விக் கற்கை நெறி ஐக்கிய இராட்சியம், ஐக்கிய அமெரிக்க குடியரசு, ஆஸ்திரேலியா, கனடா, மற்றும் நியூஸிலாந்து ஆகியவை உட்பட்ட உலகின் 13 நாடுகளைச் சேர்ந்த 72 பல்கலைக்கழகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ABE நிறுவனத்தால் நடத்தப்படும் இப்பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்பும் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் சுய ஊக்கம், பரந்துபட்ட செயற்பாடு, நிர்ணயிப்பு ஆகியவை தொடர்பான வழிகாட்டல்களை இவ் யுனிவென்சர்ஸ் கல்வி நிறுவனம் ஏற்படுத்திக் கொடுக்கும். இக்கல்வி நெறித் தகுதிகள் அம்மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தரும் இவ்வசதிகள் அவர்களது எதிர்காலத்துக்கு உயர்வையும் வருமானத்தையும் ஈட்டித்தருவதாய் அமையும். இவ்வித பயிற்சி நெறிகளையும் கற்பித்தல் நடவடிக்கைகளையும் ஒரே கட்டண அறவீட்டுடன் எமது நிறுவனம் மாணவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளமை யுனிவென்சர்ஸ் நிறுவனத்தை தனித்துவம் மிக்க நிறுவனமாகத் வெளிப்படுத்தி நிற்கின்றது. எனவே, இவ் ABE கற்கை நெறிகள் குறித்து மேலதிக தகவல்களையும், எமது நிறுவனத்தால் குறித்தொதுக்கப்பட்டுள்ள கல்வி ஆலோசகர்களது திறன் வாய்ந்த ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கற்க விரும்பும் கல்வி நெறியைத் தெரிவு செய்யும் நடவடிக்கை தொடர்பாக எமது நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.

## இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்

அடிப்படைத் தகைமைகள் உள்ள மற்றும் இல்லாத மாணவர்களுக்கென பல்வேறுவகையான டிப்ளோமா கற்கை நெறிகளை இக்கல்வி நிறுவனம் அறிமுகப்படுத்தவிருக்கின்றது.

மாறிவரும் வர்த்தக உலகம் மற்றும் எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கத்தக்க வகையில் உங்களைத் தயார்படுத்த இந்நிறுவனம் காத்திருக்கின்றது. பல்வேறு சூழ்நிலைகளிலும் திறமையாகத் தொழில் புரியத் தேவையான தீர்க்கமான சிந்தனைகளையும், தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான திறமைகளையும் ABE மாணவர் ஒருவர் பெற்றிருப்பார்.

பொது மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த வேலைகொள்வோர் எதிர்பார்க்கும் முகாமைத்துவத் திறன்களையும் அறிவையும் இந்நிறுவனம் அளிக்கும் கற்கை நெறிகள் மூலம் நீங்கள் பெறுவதில் போட்டிமிகுந்த தற்போதைய தொழில் சந்தைகளில், தொழில்வாய்ப்புக்களை நீங்கள் சுலபமாகப் பெறக்கூடியதாகவிருக்கும். ஆங்கில அறிவில்லையே என ஏங்குபவர்களுக்கும் ஆங்கில அறிவை வளர்க்க விரும்புபவர்களுக்கும் அதனை இலவசமாகக் கற்றுத்தர யுனிவென்சர்ஸ் கல்விநிறுவனம் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தரும்.

*வணிகத்துறை நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் (ABE) என்றால் என்ன?*

1973இல் ஆரம்பிக்கப்பட்ட இது ஒரு தொழில்சார் நிறுவனமாகும். இக்கல்வி நிறுவனத்தில் கற்றுத்தேறுவோர், வணிக மற்றும் பொது நிர்வாகத்தில் சிறந்த முகாமையாளர்கள் ஆகவேண்டும் என்ற ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்நிறுவனம் இயங்கிவருகின்றது. வணிக நிர்வாகம் (Business Administration); வணிகத்தகவல் - ஒழுங்கமைப்புத் துறையும் உல்லாசப் பயணத்துறையும் (Business Information Systems

கல்வி மேம்பாடு



சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கைதடி, ஊரியான் தரவையில் பனம் விதைகள் நடப்பட்டன. இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொண்டு பனம் விதை நட்ட போது எடுக்கப்பட்ட படம். (ஒ-75)

## சமய சந்நிதி

காரைநகர்,ஜன.26

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணியர் கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

மகோற்சவத்தின் தேர்த்திருவிழா அடுத்தமாதம் 5ஆம் திகதி வியாழக் கிழமையும் தீர்த்தோற்சவம் 6ஆம் திகதி வெள்ளிககிழமையும் இடம்பெற உள்ளது. (ம-73)

★ ★ ★

அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய மணவாளக்கோல விழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (3-10)

### மாணவர் வரவேற்கும் நிகழ்வு

நாவாந்துறை றோ.க.வித்தியாலயம இவ்வாண்டு தரம் ஒன்றில் சேர்க்கப்பட்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி அண்மையில் அதிபர் க.செபஸ்தியாம பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு. ம.சே.கருணாரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (ஐ-8-51)

## காரைநகரில் கும்பாபிஷேகம்

காரைநகர்,ஜன.26

காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 30 திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்று கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.44 மணி தொடக்கம் 9.04 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவ குரு சிவாகம கலாநிதி பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக்குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

இவ்வாலயத்தில் நான்கு இராஜ கோபுரங்களும் ஏனைய மண்டபங்களும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிர்மாணப்பணிகளில் தென்னிந்திய சிற்பக்கலைஞர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

(ம-73)

## புத்தூரில் கற்பூரம் உற்பத்தி

யாழ்ப்பாணம்,ஜன.26

'கெயர்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் புத்தூர் கிழக்கில் கற்பூரஉற்பத்தித் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலையில் அப்பகுதியைச் சேர்ந்த வசதிகுறைந்த விதவைகள் கற்பூரம் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கற்பூர உற்பத்தி இயந்திரம் மற்றும் பயிற்சிகளையும் 'கெயர்'நிறுவனம் வழங்கியுள்ளது. (ஐ4)

## இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல: 2880 சீ.இ.
## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல் (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

**ஐ.எவ்.பி. இல : ஜே.எவ்./நீரப் ஜீ.ஏ/08** **திகதி : 26.01.2004**

1) வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்தும் பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
ஐ.பீ.ஆர்.டி. (IBRD) கடன் வசதி ஐ.டி.எ. (IDA) நம்பிக்கையின் கீழான வசதி

02) மாவட்ட செயலாளர் யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் முடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

03) மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 25.02.2004 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம எந்திரி**
**கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி/தொலைநகல் இல. 021 - 2222632**

05) சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு, அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26.02.2004 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம், கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதேயிடத்தில் அதேநேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

06) வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**விவர அட்டவணை**

| கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01) ஜே.எவ்./நீரப்/ஜீஏ/08 | யா. பிரதேச செயலாளர் அலுவலக சுற்றுலா விடுதி புனர்நிர்மாண வேலை. | 20.000/= | 1,000/= | 4 மாதம் |

07) கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**செ.பத்மநாதன்,**
*அரசாங்க அதிபர்,*
*யாழ்ப்பாணம்.*

*மாவட்டச் செயலாளர்,*
*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.* (சி-32901) (22-17-16)


**கூரை அமைப்பில் புதிய அலை**
**அன்டன் சுபர் ஷெல்டா**
குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுபர் ஷெல்டா
- 2.5 மி.மி. கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்
- துரு பிடிக்காதது
- உத்தரவாத இடையறு அற்றது
- 20 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

* நீடித்த பாவனைக்குப் பொருந்தும் வழிகாட்டியின்படி பொருத்துங்கள்.
* இதனை விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ள மறவாதீர்கள்.

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
**சென்ற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5 ஃபெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics


## வேலணை
## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கூட்டுறவு மாதம் அனுசரிப்போம்
## தை 2004
## நாம் அனைவரும் ஒன்றுபட்டு கூட்டுறவில் இணைவோம்

கூட்டுறவை வளமாக்கி,
உங்கள் வாழ்வை மேம்படுத்த,
உங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய
கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவராக இணைந்து
அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம்.

1. கூட்டுறவுக்கும் மக்களுக்கும் உள்ள பெரும் இடைவெளியைக் குறைப்போம்.
2. மாணவ சமுதாயத்தைக் கூட்டுறவில் இணைப்போம்.
3. இளைஞர், யுவதிகளைக் கூட்டுறவில் இணைப்பதன் மூலம் அவர்களது ஆற்றல்மிகு சக்தியை கூட்டுறவு வளர்ச்சிக்குப் பயன்படுத்துவோம்.
4. சிறந்த கிராமிய பொருளாதார கலாசார மேம்பாட்டுக் கட்டுமானமாக கூட்டுறவை வளர்த்தெடுப்போம்.
5. எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் கூட்டுறவை வளர்த்தெடுப்போம்.
6. மேற்படி விடயம் தொடர்பாக எமது சங்கப் பணியாளர்கள், பணிப்பாளர்கள், கிளைக்குழுவினரும் கிராமங்கள், பாடசாலைகள் ரீதியாக அங்கத்தவர்களை இணைப்பதற்காக சகல மக்களையும் சந்திப்பதற்கு சமுகம் தருகிறார்கள். அவர்களுக்கு சகல ஒத்துழைப்பையும் வழங்கி அனைவரையும் சங்கத்தில் இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**கிளைக்குழுக்கள்**
**வேலணை**
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

(27536)(22-17-16)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 - 08 - 1936



விண்ணில் 29 - 01 - 2001

## அமரர் வல்லிபுரம் பூபாலு (மேசன்)

திதி : பஞ்சமி
26.01.2004

அன்பின் இருப்பிடமே பாசத்தின் ஒளிவிளக்கே
என்றும் எமக்காக அயராது உழைத்தவரே!
இன்றுடன் மூன்றாண்டு எம்மைவிட்டுச் சென்றாலும்
என்றும் உன் நினைவு எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

*குஞ்சர்வளவு,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.* (27562) (22-17-16)

- குடும்பத்தினர்.

# 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 08 - 1908



மறைவு 26 - 01 - 1986

அமரர்
## சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன் (கலைமாணி)
(முன்னாள் அதிபர், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்)

நீங்கள் மறைந்து ஆண்டுகள் பதினெட்டாகினும்
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு நீங்காது
உங்கள் நினைவோடு உங்களது இலட்சியங்களை வாழ்வில் நிறைவேற்றிட
அருள் செய்யுமாறு ஆண்டவன் திருவடிகளைப் பணிந்து
வேண்டுகிறோம்.

*பணிமனை,*
*மல்லாகம்.* (27574)(22-17-16) *திருமதி அம்பிகைபாகன் நகுலாம்பிகை.*

# வருட இறுதிக்குள் சகல பாடசாலைகளிலும் கணனி மூலமான செயற்பாடு அவசியம்

## அதிபர்களுக்கான கருத்தரங்கில் வலியுறுத்து

வலி.தெற்கு,ஜன.26

"பாடசாலை முகாமைத்துவத்துக்கும், கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் இலகுவான முறைகளைக் கையாள்வதற்கு ஒவ்வொரு பாடசாலைகளிலும் கணனிகளைப் பொருத்துவதற்கான முயற்சிகளைப் பாடசாலை அதிபர்கள் விரைவில் மேற்கொள்ளவேண்டும்."

- உடுவில் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் உடுவில் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் அவர் இதனை வலியுறுத்தினார்.

ஏற்கனவே சில பாடசாலைகளின் செயற்பாடுகள் கணனி மயமாக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் முடிவடைவதற்குள் சகல பாடசாலைகளிலும் கணனிகள் பொருத்தப்படவேண்டும். பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் போன்றோரின் ஒத்துழைப்பைப் பெற்று கணனிகளைப் பொருத்துவதற்கு முயற்சி எடுக்கவேண்டும்.

கணனி கற்றலில் ஈடுபடும் தமிழ் மொழி மூலம் தமது ஆரம்பக் கல்வியைக் கற்கும் மாணவர்களின் மொழி ரீதியான கலைச்சொல் தடைகளை நீக்கும் வகையிலும், கணனிக் கற்றலில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் 'மவுஸ்' நிறுவனத்தினரால் கணனி மின் இதழ் குறுவட்டு தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

எமது நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார நிலைமைகள் இவற்றைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதில் சிக்கல்களைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கின்றன. 'மவுஸ்' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள குறுவட்டுக்கள் உதாரணங்களே. இப்பல்லூடக குறுவட்டுக்கள் மாணவர்களின் சுயகற்றலை ஊக்கப்படுத்துவதுடன், ஆசிரியர்களுக்கும் பெரும் உதவியாக அமையும்.

ஒரு மாணவன் பாடசாலையில் இணைந்ததில் இருந்து விலகும் வரை அவனது பாடசாலை சார்ந்த செயற்பாடுகளைத் திரட்டி வைக்கவும் -

கணிப்பீடுகளுக்குப் புள்ளியிடுதல், வரைபு செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஆசிரியர்கள் செலவிடும் நேரத்தில் 90 சதவீதம் வரை மீதப்படுத்தவும் இவை உதவும்.

எனவே, இத்தனை முன்னேற்றமுடைய கணனிச் செயற்பாடுகளை ஒவ்வோர் அதிபர்களும் தமது பாடசாலைகளில் அமைத்துக் கொள்ள வேண்டும் - என்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஐ-152)

### சமய அறிவு போட்டி

வலிகாமம்தெற்கு,ஜன.26

வண்ணார்பண்ணை ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் பதின்மூன்று வரை கல்வி பயிலும் மாணவர்களிடையே சைவசமய அறிவுப்பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைகளின் போது நீதிநூல் மனனம், சைவசமய பொதுஅறிவு, செயல்முறைகள் போன்றன பரீட்சிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகளுக்கு தோற்றவிரும்புகின்றவர்கள் 163, நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவசமய அபிவிருத்தி கழக அறிவகத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்று பெப்ரவரிமாதம் 03ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

# இலவச பாட நூல்கள் 10லொறிகளில் வந்தன

வலி.தெற்கு.ஜன.26

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 கல்விக் கோட்டங்களுக்குமான பாடசாலை மாணவர்களின் இவ்வாண்டுக்கான இலவச பாடநூல்கள் பத்து லொறிகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வைத்து அந்தந்தக் கோட்டங்களுககான பாடநூல்கள் உரிய கோட்டக் கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைககப்பட்டுள்ளன.

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கான பாடநூல் 'விநியோகம் இன்று திங்கட்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம்பெறும் என்று உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் தெரிவித்தார்.

(ஐ-152)

# அதிபர்கள் விவரம் அனுப்பாததால் பாடநூல்கள் பலவும் வரவில்லை

வலி.தெற்கு,ஜன.26

யாழ். மாவட்டத்துக்குரிய இலவச பாடநூல்கள் கல்வித் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும், ஆறாம் ஆண்டுக்குரிய கணிதம், தமிழ் போன்ற பல பாடநூல்கள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வலயக் கல்வி அலுவலகங்களின் கீழுள்ள கோட்டங்களின் பாடசாலை அதிபர்களால் தெரிவு செய்யப்பட்ட பாடநூல்கள் பற்றிய விவரங்கள் இதுவரை தமக்குக் கிடைக்காமையே பாடநூல்களை அனுப்பிவைப்பதற்கான காலதாமதத்துக்குக் காரணம் என கல்விப் பணிப்பாளர் யூ.எஸ்.அலியார் தெரிவித்துள்ளார்.

பல பாடநூல்களை விரைவில் அனுப்பிவைப்பதற்கு வசதியாக, அதிபர்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடநூல்கள் தொடர்பான விவரங்களைக் கோட்ட ரீதியாகத் திரட்டி உடனடியாகத் திருகோணமலை மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் யூ.எஸ்.அலியார் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-152)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி ஜப்பானியப் பிரதிநிதிகள் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.26

ஜப்பான் நாட்டின் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த வெள்ளிககிழமை யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்து யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்தது.

ஜப்பான் நாட்டின் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களான இயூக் ரைகோ, ஒனோயா மைர்ஜோ, இமனறி அஜோக்கோ மற்றும் புளூமோட்டோ கி.ஹிக்ஹிகோ ஆகியோரே யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்தனர்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்த இக்குழுவினர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றியும், அவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் இணையத் தலைவர் ஸ்ரீ சக்திவேல், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் சு.ஜெயராஜ் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-5-8)

### பாலம் சேதம்: பஸ் சேவை மாற்றம்

வரணி,ஜன.26

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் குடவத்தைப் பகுதியிலுள்ள பிரதான பாலம் பழுதடைந்துள்ளமையால் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள் சேவையில் ஈடுபடும் பாதையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கலிகைச் சந்தி, ஆயத்துச் சந்தி, முள்ளிச் சந்தி ஊடாகவே தற்போது போக்குவரத்துச்சபை பஸ்கள் கொடிகாமத்துக்குப் பயணம் செய்கின்றன.

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக இப்பாலம் பழுதடைந்திருந்தும் அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-8-170)

### வவுனியா வளாகத்துக்கு புதிய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்துக்கு 2003/2004 கல்வியாண்டில் அனுமதி பெற்றவர்கள் இன்று திங்கட்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வவுனியா வளாக முதல்வர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழககிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள ஆரம்ப விழாவில் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

புகுமுக மாணவர்கள் அனைவருக்குமான அடிப்படை ஆங்கிலம், கணனி, தொடர்பாடல் ஆகிய கற்கைகள் அடுத்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் முதல்வர் அறிவித்துள்ளார். (ம-10)

### விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கடன்

யாழ்ப்பாணம்,ஜன.26

'நொவீப்' உதவித் திட்டத்தின் கீழ் சர்வோதயம் நிறுவனத்தினால் தொண்டைமானாறு, கெருடாவில் பகுதியைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 30 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாய ஊககுவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இக்கடன்கள் வழங்கப்பட்டன. (ஐ-4)

### சேதமடைந்த வீடுகளின் விவரங்களை ஒப்படைக்கப் பணிப்பு

தென்மராட்சி,ஜன.26

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதிக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த - 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் பெறும் - குடும்பங்களின் வீடுகளில் முற்றாக அல்லது பகுதியாகச் சேதமடைந்த வீடுகளின் விவரங்களைத் தனித்தனியாக இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் பிரதேச கிராம அலுவலர்களைக் கேட்டுள்ளார்.

காணியுள்ள, காணியற்ற குடும்பங்களின் பாதிப்புப் பற்றியும் பெயர் விவரங்களுடன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுள்ளார். (ஐ-8-117)

### சனசமூக நிலையம் திறந்து வைப்பு

வரணி,ஜன.26

புனரமைக்கப்பட்ட வரணி மத்திய சனசமூக நிலையத்தை கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திறந்து வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் இச்சனசமூக நிலையத்திற்கென முன்னர் 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார்.

இவ்விழாவில் இடைக்குறிச்சி கிராம உத்தியோகத்தர், மாசேரி கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், கொடிகாமம் அரசியல் பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ-8-170)

## கல்விச்சாலைக் காட்சிகள்





கோண்டாவில் இந்து மகாவித்தியாலய தமிழ் விழா அண்மையில் நடைபெற்றது. அதில் மாணவிகள் பாடல் ஒன்றுக்கு நடனம் ஆடுவதைப் படத்தில் காணலாம். (-4)



கடந்த 16ஆம் திகதி பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க. மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் - 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா நிகழ்வில் பாஷையூர் பங்குத் தந்தை அருட்தந்தை யேசுரட்னம் அடிகளார், வித்தியாலயத்தின் அதிபர் திருமதி எம்.சி.செல்வநாயகம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர். அருகில் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.



இணுவில் மத்திய கல்லூரியின் தரம் 1 கால்கோள் விழா கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் மங்கள விளக்கேற்றுகின்றார். அருகில் கல்லூரி அதிபர் துரை எங்கரசு, ஆரம்பப் பிரிவு அதிபர் வீ.பரஞ்சோதி ஆகியோரும் காணப்படுகின்றனர். (-4)



நீர்வேலி யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது பாடசாலை அதிபர் இ.இராசசேகரம் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# மணவாளக்கோல விழா

பொலிகண்டி அருள்மிகு "கந்தவனம்" ஸ்ரீகல்யாண வேல சுவாமி தேவஸ்தான மணவாளக் கோல்விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தை 13 ஆம் நாள் (27.01.2004) காலை 11 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் ஆரம்பமாகி வள்ளிதேவசேனாபதியாக அழகுமிளிரும் திருமுருகன் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்புரியும் திருக்கோலத்தை அடியவர்கள் தரிசித்து அருள்பெற்று உய்ய அழைக்கின்றோம்.

ஆலய பிரதம குரு **ஸ்ரீவைத்தியநாதக் குருக்கள்** தலைமையில் கிரியைகள் யாவும் நடைபெறும்.

பார்பதியம்மை திக்கம் செல்லையா பிள்ளை
தலைவர்
பரம்பரை ஆதீனகர்த்தா.

*நந்தவனம்,*
*பொலிகண்டி.* (27599) (24-18-16)

# கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் **திரு.வே.தி.செல்வரத்தினம்** அவர்களின் பாசத்திற்குரிய சகோதரரான

**திருப்பதி ஞானரத்தினம்** அவர்கள்

(வவுனியா, யாழ்ப்பாணம் பிரதி சுகாதார அத்தியட்சகர் காரியாலய ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

**22.01.2004** சாவடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலையில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்வி அலுவலக நலன்புரிச் சங்கம்.
வடமராட்சி வலயம், புலோலி.

(சி-32920) (24-18-16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 01 - 03 - 1944



இறப்பு 29 - 12 - 2003

## செல்வி சின்னையா குணசவுந்தரவல்லி

கடந்த 29-12-2003 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது சகோதரி செல்வி **சின்னையா குணசவுந்தரவல்லி** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26-01-2004) திங்கட்கிழமை வில்லூன்றி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் நாளைமறுதினம் (28-01-2004) புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இல.16, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*சுண்டுக்குழி,*
*யாழ்ப்பாணம்.*

- **குடும்பத்தினர்.**

(27541)(16-18-24)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 12 - 1936



மறைவு 17 - 01 - 1994

## அமரர் நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்

(உரிமையாளர், கலைவாணி நகைமாளிகை )

திதி: 26.01.2004 பஞ்சமி

சாந்தமான குணத்தின் இருப்பிடமே!
சிரித்த முகத்துடன் எல்லோரையும் கபர்பவரே!
சுற்றத்தாரை உபசரிப்பவரே!
சூது வாது அற்ற அன்பின் பிறப்பிடமே!
செல்வச் சிறப்புடன் வாழ்ந்தவரே!
ஆண்டுகள் பத்துக் கடந்தாலும் உங்கள்
நினைவுகள் மனத்தில் வைரமாய் முத்துவாய்
என்றும் நிலைத்து நிற்கும்.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மனேஜர் S.நாகராசா குடும்பம்.

*111B, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(27447) (24-18-16)

## கட்டாக்காலிநாய் அழிப்பு தீவிரம்

தென்மராட்சி,ஜன.26

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கட்டாக்காலியாக அலைந்த 353 நாய்கள் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால கடந்த 22 தினங்களில் பிடித்து அழிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகர சபையினரும் சுகாதாரத் திணைக்களத்தினரும் இணைந்து நகரச சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாக அலையும் நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியினைக் கடந்த ஜனவரி முதலாம் திகதி ஆரம்பித்து வாரத்தில் மூன்று தினங்கள் நடத்தி வருகின்றனர். (3-117)

## மூளைக் காய்ச்சலால் சிறுவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.26

மூளைக் காய்ச்சல் நோயினால் சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன் தினம் உயிரிழந்தார்.

சிறுவனுக்கு 12நாள்களாகக் காய்ச்சல் இருந்ததாகவும் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த வேளை காய்ச்சல் அதிகரித்ததை அடுத்து மேலதிக சிகிச்சைக்காக கடந்த 20ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான் என்றும் கூறப்படுகிறது. அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட் படுத்திய 4நாள்களின் பின் சிறுவன் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானான். (ஒ-15)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459

(26756) (24-18-16)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## திரு. தம்பிராசா சிவநாதன்(ஜே.பி.)

மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளரான லயன் **த.சிவநாதன்** அகில இலங்கைச் சமாதான நீதிவானாக அண்மையில் மன்னார் மாவட்ட பதில் நீதிபதி திரு. எம்.எம்.சபுறுதீன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

புகையிரத நிலைய வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர், உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆங்கில ஆசிரியர் திரு.வ.தம்பிராசா, திருமதி ஜானகி தம்பிராசா ஆகியோரின் புத்திரனும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவரும் சிறந்த சமூகசேவையாளருமாவார். இவர் மேலும் சேவைகளால் சிறப்புற்று சீர்சிறப்புடன் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*புகையிரத நிலைய வீதி,*
*மல்லாகம்.* (27622)(34-18-16-24)

**நண்பர்களும்,**
**உறவினர்களும்.**

# காணி விற்பனைக்கு

பின்வரும் ஆதனங்களின் விற்பனைக்கான கேள்வித்தொகைகள் கோரப்படுகின்றன. இக்காணிகளைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் 2004 பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் முழு விவரங்களுடன் எழுத்துமூலமான விலை மனுக்களை எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

1. **யாழ்ப்பாணம்**
   போதனா வைத்தியசாலைக்கு பின்புறமாக, மின்சார நிலைய வீதி, 2 ஆம் ஒழுங்கை, இலக்கம் 15 இல் காணி பரப்பு 3, கிணறு, காரியாலய கட்டடம் மற்றும் அவைக்கு உரியவையும், 3 ஆம் ஒழுங்கையூடாகவும் பாதையுண்டு.
2. **சங்கானை**
   தேவாலய வீதிக்கு அருகில் காணி "சேக்காலை" - நிலப் பரப்பு 10, கிணறு, வீடு மற்றும் அதற்குரியவையும்.
3. **சங்கானை**
   சங்கானை கிழக்கில் சண்டிலிப்பாய் கிராம எல்லைக்கு அருகில் காணி "பள்ளியிற் கரை" நிலப்பரப்பு 5 உம் அதற்குரியவையும்.
4. **சங்கானை**
   சங்கானை கிழக்கில், கூடத்து அம்பாள் ஆலயத்திற்கு அருகல் காணி "குஞ்சர் அடைப்பு" நிலப்பரப்பு 12, கிணறு, வீடு மற்றும் அதற்குரியவையும்.
5. **வரணி / இயத்தாலை**
   கொடிகாமம் - பருத்தித்துறை வீதிக்கு அருகல், தாவளை இயத்தாலையில் காணி "வேற்காடு"நிலப்பரப்பு 12½ மற்றும் அதற்குரியவையும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 27.02.2004**

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு:
**10a.m. - 4.p.m.** (கிழமை நாள்களில்)

**SHAPRA**
21/9, Polhengoda Gardens,
Colombo - 5.
T.P.: 2853637.

(C/32728)(34-14-16-18-24)


# YOGI BEAUTY PARLOUR

(Academy of Beauty Culture & Hair Dressing)

**HOMESCIENCE ACADEMY**

குறுகியகால புதிய பயிற்சி வகுப்புகள் 30.01.2004 முதல் ஆரம்பமாகவுள்ளன

(1) அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture and Therapy)
(2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்
(3) இலகு வழித்தையல், கேக் ஐசிங், மேலைத்தேயஐசிங் அலங்காரமும் மாச்சீனி மலர் அலங்காரமும் (fondant Structures and Suger Flowers) கிறிஸ்டல் அழகு பொருள்கள் தயாரித்தல், துணியில் வர்ண அலங்கரிப்பு, செயற்கைமலர் அலங்காரங்கள் (Flower Making and Bouquet Making)

*இதில் பாடக் குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும்.*
*சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்புகொள்ளவும்.*

(16-18-24) (27618)

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம் (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக).T.P.:222 2796


# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தை மாதம் 12 ஆம் நாள் இன்று (26.01.2004) திங்கட்கிழமை பகல் 12.36 மணிமுதல் 2.06 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

மணமகன்
எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சத்தியமூர்த்தி**
அவர்களுக்கும்



மணமகள்
எமது புத்திரி
திருநிறை செல்வி
**தயாளினி**
(கனடா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணஞ்செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை விரும்பும்:**

திரு.திருமதி க.கந்தசாமி
இராச வீதி, கல்வியங்காடு.

திரு.திருமதி மு.பாலசுப்பிரமணியம்
சிவபூதராயர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(27590)(34-24-18-16)

# பாடசாலை மட்டக்கணிப்பீட்டில் திறந்த நடைமுறை அறிமுகம்

## பிரதிப் பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி.ஜன.26

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையில் திறந்த நடைமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன மதிப்பீட்டு முறையில் பேணப்பட்ட அந்தரங்கத்தன்மை முறை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்காக நீக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு கூறினார் பரீட்சைத் திணைக்கள பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் .

யாழ்மாவட்டப் பாடசாலைகளில் ஜி.சஈ உயர்தர வகுப்புப் பகுதித் தலைவர்களாக கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு பரீட்சைத் திணைக் களத்தினால் நடத்தப்பட்ட செயலமர்வு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெற்றது.

யாழ். கல்விவலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் தொடர்ந்து கருத்துரை வழங்கும்போது கூறியதாவது:-

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான போஷாக்குமிக்க செயல்வடிவங்களைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அளவுக்கு அதிகமான வேலைப்பழுவையும் சுமையையும் கொடுத்துள்ளது எனக்கூறப்படுகிறது. இது தவறு. உண்மைநிலையை முழுமையாகப் புரிந்துகொள்ளாத நிலையிலும் கடந்த காலங்களில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் யாழ் மாவட்டத்திற்கு நேரடியாக வருகை தந்து விளக்கம் அளிப்பதில் இருந்த நெருக்கடி யாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு பரீட்சைத் திணைக்களம் இந்தச் செயலமர்வை தமிழ்மொழி மூலம் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் நடத்த முன்வந்துள்ளது.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் பொதுப்பரீட்சை செயற்றிட்டத்துக்கு மாற்றீடாக முன்வைக்கப்படவில்லை. மதிப்பீட்டுத் திட்டத்தில் பேணப்பட்டு வந்த அந்தரங்கத் தன்மை, பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத்திட்டத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பகிரங்கமாக, சுதந்திரமாக, வெளிப்படையாக செயற்பட வழி ஏற்பட்டுள்ளது. பாடசாலைக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் தேசிய கல்வி நிறுவகம் அதனை வடிவமைத்து செயற்படுத்தியது.

ஆரம்பகாலக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்தில் சில குறைபாடுகள் காணப்பட்டதை அடுத்து 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம் தரவகுப்புகளுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டத்தை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்று இலகுபடுத்தியுள்ளது.

கணிப்பீட்டு வேலைத்திட்டத்தில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்புடைய விதத்தில் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பாதுகாத்து கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரிகளைத் திருப்திப்படுத்தினால் போதும் என்ற நிலை முற்றாக மாற்றப்பட வேண்டும். மாணவர்களுக்கு போஷாக்கு மிக்க கல்விச் செயற்பாடுகளை வழங்குவதற்கு ஏற்புடைய விதத்தில் ஆசிரியர்கள் மனப்பூர்வமாக கணிப்பீட்டு வேலைத்திட்டத்தில் அக்கறை கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் உதவிப் பரீட்சை ஆணையாளர் ஏ.சொலமன் உரையாற்றியபோது கூறியதாவது:-

பாடசாலைக் கணிப்பீட்டு வேலைத் திட்டம் தொடர்பாக யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மத்தியில் குழப்பநிலை உருவாகியுள்ளது.

10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம் தர வகுப்புக்களுக்கான கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் முழுப்பொறுப்பும் பரீட்சைத்திணைக்களத்துக்கு உரியது.

மேற்படி வகுப்புக்களுக்கான கணிப்பீட்டு வேலைத்திட்டம் தொடர்பாக காலத்திற்கு காலம் பல சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு அவற்றின் முழுமையான விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளன.

வாராந்தம் கற்பிக்கின்ற பாடவேளை அளவுகுறித்த கணிப்பீடுகளைத் தவணைக்குத் திட்டமிட்டு ஏற்புடைய விதத்தில் நடத்தினால் போதுமானது - என்றார். (ஒ-11)

# அதிகரித்து வரும் குற்றச்செயல்களால் பொலீஸார் மீது மக்கள் அவநம்பிக்கை!

## வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.26

குடாநாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் ஸ்ரீலங்கா பொலீஸார் மீது பொதுமக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாண வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அந்த ஒன்றியம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாடு எப்போது ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததோ! அன்றிலிருந்து இன்று வரை கொலைக்களமாக மாறியுள்ளது. மக்களின் அமைதி, சுதந்திரம் அடியோடு பிடுங்கப்பட்டு விட்டது. அப்பாவிக் குடிமக்களின் உயிர் இனந்தெரியாதோரால் பறிக்கப்படுவதும் தொடர் கதையாகிவிட்டது.

கடந்த 14ஆம் திகதி சாவகச்சேரி கனகன்புளியடிப் பகுதியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலைகள் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. அதே போன்று ஏற்கனவே நடந்துள்ள கொலைகளின் குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

யாழ். குடாவில் அதிகரித்துவரும் சமூகச் சீர்கேடுகள், தீயசக்திகளின் திட்டமிட்ட கொலைகள் தொடர்பாக மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். இது குறித்து தமது உணர்வலைகளை எம்மிடம் பகிர்ந்து கொண்டுள்ளனர். ஆதலால், இவ்வாறான தீய சக்திகளின் கொடூரமான செயல்களை யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஆழமாக ஆராய்ந்து வருகிறது.

ஸ்ரீலங்கா பொலீஸார் இவ்வாறான கொலைகள் தொடர்பாகப் போதிய நடவடிக்கை எடுத்துள்ளனரா? குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனரா? கொலைகள் தொடர்வதன் பின்னணி என்ன? இவ்வாறான கொலைகளைத் தடுக்க பொலீஸாரால் முடியவில்லையா? இவை குறித்து ஸ்ரீலங்கா பொலீஸார் மீது மக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வாறான கொலைகளுக்கு ஸ்ரீலங்கா அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இவ்வாறான கொலைகளோ, குற்றச் செயல்களோ அல்லது சமூகச் சீர்கேடுகளோ நடப்பதைக் காணமுடியாது. அவ்வாறு எங்காவது ஒரு மூலையில் எப்போதாவது ஒருநாள் நடைபெற்றாலும் குற்றவாளிகளை தமிழீழக் காவல் துறை கண்டுபிடித்து விடுகிறது. அவர்களது கடமையுணர்வை அனைவரும் பாராட்டுகின்றனர். ஆனால், யாழ். குடாவின் நிலை பெரிதும் கவலையளிப்பதாகவுள்ளது.

அநியாயமான கொலைகளை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது. தமிழ்மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு, பாதுகாப்பிற்கு ஸ்ரீலங்கா பொலீஸாரால் உத்தரவாதம் இல்லை என்பது தெரிகிறது. இது தொடர்பாக எமது முயற்சிகள் தொடரப்படும். தமிழ்மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து தீயசக்திகளின் செயலை முறியடிக்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இவ்வறிக்கை மூலம் வேண்டுகோள் விடுகிறது - என்றுள்ளது. (ஒ-3)

# அலுவலக நேரத்தில் போராட்டம் நடத்தியவருக்கு விளக்குமாற்று அடி!

## கடுகன்னாவை நகரசபையில் சம்பவம்

கொழும்பு,ஜன.26

அலுவலக நேரத்தில் அரசியல் போராட்டம் நடத்திய நகரசபை ஊழியர், பெண்மணி ஒருவரின் 'விளக்குமாற்று' அடிக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடுகன்னாவை நகர சபை அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையேயான கூட்டு ஒப்பந்தம் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது. கடுகன்னாவை நகரசபை ஊழியரும் ஐ.தே.கட்சி ஆதரவாளருமான விஜேரட்ண என்பவர் இந்தக் கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க எண்ணினார்.

இதனால், அவர் மேலும் நகர சபை ஊழியர்களையும் சேர்த்துக் கொண்டு அலுவலக நேரத்தில் கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கறுப்புக் கொடிப் போராட்டத்தை நடத்தினர்.

இந்த வேளையில், பெண்மணி ஒருவர் தனது தேவைக்காக நகர சபை அலுவலகத்துக்கு வந்தார். கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்தப்பட்டதால் அந்தப் பெண்மணிக்கு வேலையை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

இதனால், ஆத்திரமடைந்த அவர் அலுவலகத்தில் இருந்த விளக்குமாற்றைக் கையில் எடுத்தார். கறுப்புக் கொடிப்போராட்டம் நடத்தியவர்களை அதனால் அடித்தார். குறிப்பாக போராட்டத்துக்கு தலைமை தாங்கிய விஜேரட்ணவுக்கு கடும் அடி கிடைத்தது.

உள்ளூராட்சிச் சபைகளுக்குப் பொதுமக்கள் வரிசெலுத்துவது அலுவலக நேரத்தில் அரசியல் போராட்டங்களில் ஊழியர்கள் ஈடுபடுவதற்காக அல்ல என்று அந்தப் பெண்மணி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு அறிவுறுத்தினார் என்று கூறப்படுகிறது.(ஒ-10)

# பிரதான வீதிகளைப் புனரமைக்க பிரதேச செயலரிடம் கோரிக்கை

## தென்மராட்சிச் சமாசம் விடுத்தது

வரணி - வேம்பிராய் ஊடான தடம் எண் 754 இலக்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வசதியாக மேற்படி வீதியைப் புனரமைத்துத் தருமாறு தென்மராட்சி கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் தென்மராட்சி பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த காலகட்டத்தில் இப்பிரதேசம் பாதுகாப்பு வலயம் ஆக்கப்பட்டது. அத்துடன், இராணுவம் நீண்ட காலமாக இப்பிரதேசத்தில் நிலை கொண்டு இருந்ததால் மக்கள் நடமாட்டமும் இந்தப் பிரதேசத்தில் தடை செய்யப்பட்டிருந்தது.

யுத்த காலத்தில் படையினரின் கனரக வாகனங்கள் இப்பாதையூடாக போக்குவரத்தில் ஈடுபட்டன. இதனால், மிகவும் மோசமாக இவ்வீதி பழுதடைந்துள்ளது. இதனை விரைவில் புனரமைத்துத் தருமாறு கோருகின்றோம்.

மேலும் வரணி - வராலியூடான பிரதான வீதியும் தற்சமயம் வடமராட்சிப் பகுதியூடான போக்குவரத்துப் பாவனையில் உள்ளது. வடமராட்சியூடான கொழும்புப் பாதைக்குச் செல்லும் தனியார் கனரக வாகனங்கள், தனியார் பஸ்கள் படையினரின் கனரக வாகனங்கள் போன்றவை இப்பாதையைச் தற்சமயம் பயன்படுத்துகின்றன.

எனவே, இப்பாதையை விசாலமாக்குமாறு கோருகிறோம் - என்றுள்ளது. (ஒ-170)

# பொது நிகழ்வுகளின் காட்சிகள்




நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் குருநகரில் உள்ள வறிய மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்ட நிகழ்வின்பின், மாணவர்களும் கழக உறுப்பினர்களும் இணைந்து எடுத்துக்கொண்ட படம். (ஐ-10)




மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் மன்றத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் நடத்திய இலவச மருத்துவ முகாமில் சிகிச்சைபெறும் மக்களையும் சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களையும் படத்தில் காணலாம். *(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*




வலி.கிழக்கு பிரதேச சபையினால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி வார கவிதைப் போட்டியில் முதலிடம்பெற்ற நெல்லியடியைச் சேர்ந்த எழுதுவினைஞர் வி.ப.செல்வநாதன் கவிதையை வாசிப்பதைப் படத்தில் காணலாம். பிரதேச சபையின் செயலாளர் எஸ்.குகதாசனும் படத்தில் உள்ளனர். (ஐ-15)




இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தின் ஆண்டு விழா நிகழ்வில் உடுவில் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் சு.கணபதிப்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவி இயக்குநர் ரி.சிவதட்சணாமூர்த்தி, எஸ்.தனபாலசிங்கம், கழகத் தலைவர் ச.ஸ்ரீமகேஸ்வரன் ஆகியோரும் உள்ளனர். (ஐ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

50 ஸ்ரீ தொடரிலக்கமுடைய Toyota Hiace (LH 30) சகல ஆவணங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சுந்தரலிங்கம் விதானையார், ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டி (வதிரிச சந்திக்கு அருகில்). ஞாயிற்றுக்கிழமை மட்டும் பார்வையிடலாம். T.P.: 0777 589608. (27532)

கட்டட வேலைக்கு பாவித்த மாம்பலகைகள், ஒட்டுப்பலகைகள், முட்டுமரங்கள் 4x2 என்பன விற்பனைக்கு உ ண்டு. தொடர்பு:- 132, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். T.P.222 6104, 222 6180. (27609)

## வாடகைக்கு

திருமண சேவைக்கு மட்டும் வாடகைக்கு விடுவதற்கான New Model(2000 Model) வெள்ளைக் கார். தொடர்புகளுக்கு:- T.P.: 0777 113880, 021 222 7357. (27532)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் கோணமலை லேனில் 2 ஆம் வீடு (மருத்துவபீடத்திற்கு அருகில்) 2 Hall, 4 அறைகள், தளபாட வசதி, வாகன தரிப்பிடம், தொலைபேசி வசதியுடன் கூடிய அலுவலக பாவனைக்கேற்ற வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: கணேஸ்வரராஜா, T.P.:021 222 6459. (27617)

## வீடு விற்பனைக்கு

ஆடியன்பிட்டி வீதி, சாவகச்சேரியில் அமைதியான சூழலில் 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு திருமதி அபாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), பாலகிரி, கல்லடி ஒழுங்கை,சாவகச்சேரி. (27592)

## வாகன விற்பனை

Yamaha Mate-50 GA இலக்க மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கோணமலை லேனில் 2 ஆம் வீடு (மருத்துவபீடத்திற்கு அருகில்), திருநெல்வேலி. T.P.:021-222 6459. (27616)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 28.01.2004 மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P:3529 2867, ஸ்ரீபன் ஜோச் சண்முகம் லேன், சங்கத்தானை. (27614)

## கடைவிற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் ஸ்ரீதர் தியேட்டருக்கு முன்பாக கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: திரு.ந.இரகுநாதன், கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (27610)

# SAMACON LTD

## தேவை

யாழ். நகரில் 3 மாடிக் கட்டடம் அமைப்பதற்கு கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Civil Engineers
2. Technical Officers

தயவுசெய்து 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல.2149**

(27634) மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34-26-11-17)


# இதய அஞ்சலி



## சின்னையா கனகசபை

*(றீகல் வீடியோ உரிமையாளர்)*

*செய்யும் தொழிலே தெய்வம் என*
*வாழ்ந்து எம்முடன் அன்பாகவும்*
*பண்பாகவும் பழகிய உங்களை*
*இறைவன் "தேவலோக இந்திரசபை*
*நிகழ்வுகளைப் படம்பிடித்திட கனகசபையே வா"!*
*என அழைத்துவிட்டான்.*

பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு; அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வீடியோ கலாமினி**
அச்சுவேலி - 0777111018.

(C/32920)(34-16-17)

# மரண அறிவித்தல்

## திருமதி அரியமலர் சிவராஜா

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் சிவராஜா நேற்று (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - அருளம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை சிவராஜா (ஓய்வுபெற்ற ப.நோ.கூ.ச. பிரதம லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ந.சிவசோதி மற்றும் சு.சிவராஜரெட்ணம், இ.சிவகாம்மி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் இராஜசிங்கம், சிவபாலரெட்ணம் ஆகியோரின் சகலையும் சி.சிவறாயேஸ்வரன் (சுகாதாரப் பகுதி, யா.மா.ந.சபை), திருமதி ப.சிவபாலேஸ்வரி, சி.சிவகுமாரி, சி.சிவகுமார் (கனடா), சி.சிவறாஜகுமார் (லங்கா சிமெந்து நிறுவனம்), திருமதி க.சிவயோகமலர் (சத்தியா) (சித்தமருத்துவ வைத்தியர்), சு.சிவறாஜமலர்,சிவயோகராஜா (ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சி.சிவஜெயந்தி (யாழ்.ப.நோ.கூ.சங்க எழுதுநர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சி.பத்மயோகன், திருமதி சி.தேவகுமாரி (ஆசிரியர்,சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), செ.சூரியகுமாரன், ப.கரிகரன், திருமதி சி.ஜசிந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வி ப.சரணியா மற்றும் செல்வன் சி.ஜெஷான் (கனடா), செல்வன் சி.ஜெனோஷன் (கனடா), செல்வி சி.ஜெசிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு இலக்கம் 14/1, விதானையார் வீதி, சுண்டிக்குளியில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கொழும்புத்துறை துண்டிமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*14/1, விதானையார் வீதி, சுண்டுக்குளி.* (26-16-17)

தகவல்: (27628)
**மகன் சி.சிவறாயேஸ்வரன்.**

# நெஞ்சைவிட்டகலா 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றிநவிலலும் – ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



"மண்ணில் என்னை நேசித்தவர்களே
விண்ணிலும் என்னை மறவாதீர்கள்".

# அமரர் நிக்ஷன்

## (மரியாம்பிள்ளை டொமிற் அமலறாஜன்)

### (குருநகர் பிரபல குத்தகையாளர்)

**தாயின் மடியில்**
**11-02-1971**

**இறைவனின் அடியில்**
**27-12-2003**

**ஆண்டுகள் மூன்று போதுமென்றா**
**என்னைப் பிரிய நினைத்தீர்**
**விலகமாட்டேன் உன்னைவிட்டு என்றீரே**
**எம்மைவிட்டு எங்கு சென்றீர்?**
**அப்பா! அப்பா! என்ற மகளின் மழலைகூட**
**மறந்தீரோ ஏங்கித் தவிக்கிறோம்!**
**ஆறுதல் கூற வாரீரோ.**

எமது அன்புத் தெய்வத்தின் மரணத்தில் எம்முடன் தோளோடு தோள் நின்று எமக்கு ஆறுதல் வழங்கிய பின்வரும் அன்பு நெஞ்சங்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★லக்ஸ்மன் கபே நண்பர்கள்
★K.K.S.வாடி உரிமையாளர், ஊழியர்கள்
★மல்லிகா (மேரி), கொழும்பு
★குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் நிறுவனம்
★தியாகராஜா (ராஜா), கொழும்பு
★டினூஸ் பந்தல்சேவை உரிமையாளர், ஊழியர்கள்
★S.K.M.E. நிறுவனம், நாவாந்துறை
★சிறிநதியா நகைமாடம் உரிமையாளர், ஊழியர்கள்
★சிறிரூபா நகைமாடம் உரிமையாளர், ஊழியர்கள்
★சானுயா நகைமாடம் உரிமையாளர், ஊழியர்கள்
★லோயலாஸ் நிறுவன உரிமையாளர், ஊழியர்கள்
★பாடுமீன் விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர்
★யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்
★மெலிஞ்சிமுனை மக்கள்.
★மெலிஞ்சிமுனை நண்பர்கள்
★நாவாந்துறை நண்பர்கள்
★ஜெனிபர் வீடியோ நண்பர்கள்
★குருநகர் யுத் கவுன்சில்
★குருநகர் கடலுணவு சந்தைப்படுத்துவோர் சங்கம்
★கொட்டடி கடலுணவு சந்தைப்படுத்துவோர் சங்கம்
★குருநகர் அலைகள் மன்ற உறுப்பினர்கள்

இறுதி ஊர்வலத்தின் போது வீட்டிலிருந்து சேமக்காலை வரையான பாதைகள் அனைத்தையும் அலங்கரித்து அனைத்து அஞ்சலி நிகழ்விலும் கலந்துகொண்ட லக்ஸ்மன் கபே நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று (26.01.2004) திங்கட்கிழமை காலை 6.15மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(திருப்பலி முடிந்ததும் வீட்டிற்கு வரவும்)

இவரின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மகள், தந்தை, தாய், மாமா, மாமி, சகோதரர், மைத்துனர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

53/3, மவுன்காமல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம். (சி-32927) (26-34-11-17)

# ரூபாவின் பெறுமதியில் திடீர் வீழ்ச்சி; இறக்குமதிப் பொருள்கள் விலையேறலாம்

கொழும்பு,ஜன.26

கடந்த சில வாரங்களாக எதிர்பாராத வகையில், அமெரிக்க டொலர், பிரிட்டிஷ் பவுண்ட், ஜப்பானிய யென் மற்றும் ஐரோப்பிய யூரோ ஆகியவற்றின் பெறுமானத்தின் முன் இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாகவே குறைந்து வருகின்றது. இதனால், இங்கு அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கக் கூடுமென கொழும்பு மொத்த வர்த்தகச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டுப் பொருள்களின் கொள்வனவுகளில் நூற்றுக்கு சுமார் 70 வீதமான வர்த்தக நடவடிக்கைகளில் அமெரிக்க டொலர்களே பயன்படுத்தப்படுகின்றன. சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு டொலரின் பெறுமதி 94 ரூபாவாக இருந்தது. கடந்தவாரம் டொலரின் பெறுமதி 98 ரூபா வரை அதிகரித்துள்ளது.

பிரிட்டிஷ் பவுண்ட்ஸின் பெறுமதி அதிகளவில் அதிகரித்துள்ளது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் 169 ரூபாவாக இருந்து வந்துள்ள பவுண்ட்ஸின் பெறுமதி கடந்தவாரம் 180 ரூபாவாக உயர்ந்துள்ளது.

ஜப்பானிய யென்னின் பெறுமதியும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் 85 சதமாக இருந்த ஒரு யென்னின் பெறுமதி இவ்வாரமளவில் 94 சதமாக உயர்ந்துள்ளது.

சுமார் 15 ஐரோப்பிய நாடுகளில் பாவனையில் உள்ள யூரோ ஒன்றின் பெறுமதி ஒரு மாதத்திற்கு முன்னர் 110 ரூபாவாக இருந்தது. ஆனால், இது கடந்தவாரம் 120 ரூபாவாக உயர்ந்தது.

இந்த அந்நிய செலாவணி விகிதாசார மாற்றத்தின் காரணமாக ஏற்படவுள்ள விளைவுகள் பற்றி, பொருளாதார ஆய்வாளரும், "மெர்க்கன்டைல் மெர்ச்சன்ட்" வங்கியின் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பணிப்பாளருமான நவ்சாப் பரீட் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

'சர்வதேசச் சந்தையில் மேற்குலக நாடுகளின் நாணயப் பெறுமதி அதிகரித்துள்ளது. இதனால், எரிபொருள்கள், பாம்ஓ வகைகள், கோதுமை மா, தகரத்தில் அடைத்த உணவு வகைகள், இயந்திர வகைகள் முக்கியமாக ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் வாகனங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என்றார் அவர்.

தற்போது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தைத்த ஆடைகள், மரக்கறி வகைகள், பழவகைகள், பூக்கள் மற்றும் கடலுணவுகள் போன்றவை வெளிநாட்டுச் செலாவணியில் எமக்கு அதிக இலாபத்தைப் பெற்றுத் தரவல்லன எனவும் அவர் தெரிவித்தார்.

ரூபாவின் பெறுமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் காரணமாக வெளிநாட்டுக் கற்கைகளை குறிப்பாக லண்டன் பரீட்சைகள் தொடர்பாகப் பதிவு செய்துள்ள இலங்கையைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் பரீட்சைக் கட்டணங்களும் உயரக் கூடுமெனவும் மேலும் அவர் தெரிவித்தார். (ஒ)

# கொக்குவிலில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணி நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம்,ஜன.26

கொக்குவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றும் நடவடிக்கை நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை -

முற்பகல் 9மணி முதல் முற்பகல் 10.30 மணிவரை பொற்பதி வீதி காளிகோயில் அருகே நேதாஜி சனசமூக நிலையத்திலும் -

முற்பகல் 10.45 மணிமுதல் மதியம் 12 மணிவரை கோயில் வீதி, மனோன்மணி சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் ஒரு மணி முதல் பிற்பகல் 2மணி வரை சம்பியன் வீதி, வளர்மதி சனசமூக நிலையத்திலும் - தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை மறுதினம் புதன்கிழமை - முற்பகல் 9மணிமுதல் முற்பகல் 10.30 மணி வரை குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் -

முற்பகல் 10.45 மணி முதல் மதியம் 12மணிவரை வராகி அம்மன் கோயிலடியிலும் -

பிற்பகல் ஒருமணி முதல் பிற்பகல் 2மணிவரை கேணியடி கலைமகள் சனசமூக நிலையத்திலும் - தடுப்பூசி ஏற்றப்படும்.

எதிர்வரும் 29ஆம் திகதி - முற்பகல் 9மணி முதல் 10.30 மணி வரை கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்திலும் -

முற்பகல் 10.45 மணி முதல் மதியம் ஒருமணிவரை பூநாறி ஒழுங்கை கலைவாணி சனசமூகநிலையத்திலும் -

பிற்பகல் ஒரு மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை பிரம்படி ஒழுங்கை கொக்குவில் சனசமூக நிலையத்திலும் - தடுப்பூசி ஏற்றப்படும். (ஒ)

# வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி குடாநாட்டுக் கல்வியை வளர்ப்போம்

## கல்விக் கழகப்பொறுப்பாளர் அழைப்பு

கிளிநொச்சி,ஜன.26

கடந்த போர்க் கால அழிவுகள் ஒருபுறம், பொருளாதாரத் தடை மறுபுறம் எனப் பல்வேறு இடர்களுக்கும் மத்தியில் எமது தாயகப் பகுதியிலுள்ள வங்களை உச்சமாகப் பயன்படுத்தி எம் மாணவர்களின் கல்வியை வளர்த்தெடுப்போம்.

- இவ்வாறு அழைப்பு விடுத்தார் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி மேம்பாடு என்ற வகையில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புகளுடன் மட்டும் நின்று விடக்கூடாது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கல்வித்துறையில் அனைத்துப் பிரிவினரும் திறமையாகச் செயற்பட வேண்டும்.

கல்வித்துறையில் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையிலேயே தமிழீழக் கல்விப் பேரவை அமைக்கப்பட்டது.

ஏற்கனவே வளப்பற்றாக்குறையும் கடந்த போர்க்காலத்தில் ஏற்பட்ட பௌதிக வளங்களின் அழிவுகளும் கல்விமேம்பாட்டுக்குத் தடைக்கற்களாக உள்ளன. ஆனாலும், இந்தத் தடைகளின் மத்தியிலும் தறபோதுள்ள வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி தமிழ் மாணவர்களின் கல்வியை வளர்த்தெடுக்க வேண்டும் - என்று அவர் கூறினார். (ஒ-5)

# கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கு மூன்று நாள் பயிற்சிப்பட்டறை

## அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.26

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான மூன்றுநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி முதல் நல்லூரில் அமைந்துள்ள வணிகக் கைத்தொழில் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

கட்டட ஒப்பந்தகாரர்களின் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் நிகொட் மற்றும் ஜேமன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன இணைந்து இந்தப் பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி, நிகொட் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன், ஜி.ரி.இசற். இணைப்பாளர் இளங்கோ குரு மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவர்.

'இக்ராட்' நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் 'சீமா' நிறுவனம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளனர்.

பயிற்சி நெறியில் கலந்துகொண்டோருக்கு முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் அரச திணைக்களங்களுடன் கட்டட நிர்மாண ஒப்பந்தங்களை மேற கொள்ள இந்த சான்றிதழ்கள் கூடுதல் வாய்ப்பாக அமையும் என்று கூறப்படுகிறது.

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான இக்ராட் நிறுவனத்தின் பயிற்சி இதுவரை காலமும் கொழும்பில் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலேயே நடத்தப்பட்டு வந்தது இதனால் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் ஒப்பந்தகாரர்கள் இந்தப் பயிற்சியைப்பெற முடியாதிருந்தது.

இதனை நிவர்த்திசெய்யும் வகையிலேயே இப்பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. பயிற்சி வகுப்புக்களில் முற்று முழுதாகத் தமிழ் மொழியில் நடத்தப்படவுள்ளதுடன் தமிழ் மொழியில் அச்சடித்த குறிப்புக்களும் வழங்கப்படும் எனவும் யாழ். மாவட்ட நிகொட் பிரதித்திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராசா தெரிவித்தார்.

இதேவேளை, இப்பயிற்சி நெறி முல்லைத்தீவு மாவட்டத்தில் அடுத்த மாதம் 18ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையும், கிளிநொச்சியில் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையும் வவுனியாவில் எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையும் மட்டக்களப்பில் மார்ச் 6 முதல் 8 வரையும் அம்பாறையில் மார்ச் 16 ஆம் திகதிமுதல் 18 ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளன.

# குடாநாட்டில் இப்படியும் ஒரு சம்பவம்!

யாழ்ப்பாணம்,ஜன.26

அச்சுவேலியைச் சேர்ந்த 16 வயது இளம் பெண் ஒருவர் தான் பெற்றெடுத்த பிள்ளையை மற்றொருவருக்கு தத்துக் கொடுக்க நீதிமன்றத்தை நாடிய போது அக்குழந்தையின் தந்தை குறிப்பிட்ட இளம் பெண்ணின் ஒன்றுவிட்ட சகோதரன் என்ற விடயம் தெரிய வந்தது.

உடுவில் நல்லாயன் இல்லத்தில் தங்கியிருந்த திருமணமாகாத 16 வயதுப் பெண் கடந்த வருடம் ஜூலை மாதம் கர்ப்பம்தரித்து, ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். அந்தக்குழந்தைக்கு பிறப்புச் சான்றிதழையும் அவர் பெற்றார். குழந்தை மூன்று வயதை அடைந்த போது, அந்தக் குழந்தையைத் தத்தெடுக்க ஒரு குடும்பம் முன்வந்தது.

இதையடுத்து குழந்தையைத் தத்துக்கொடுக்க அனுமதி வழங்கக் கோரி அந்தப் பெண் யாழ் நீதிமன்றத்தை நாடி மனு ஒன்றைத்தாக்கல் செய்தார்.

அந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம், குழந்தையின் பிறப்புச் சான்றிதழில் தந்தையின் பெயர் இருக்காததை நீதிவான் இ.த.விக்னராஜா அவதானித்தா[illegible]தனை அடுத்து அந்தப்பெண் விரி[illegible] விசாரணை செய்யப்பட்டார்.

பிரஸ்தாப குழந்தையின் தந்தை யார்? என நீதிவான் அப்பெண்ணிடம் கேட்டார்.

சம்பந்தப்பட்டவரை அடையாளம் காட்ட முடியும். ஆனால், அவரின் பெயர் விவரங்கள் தெரியாது என்று பெண் அப்போது தெரிவித்தார்.

மேலும் பாடசாலையில் தான் கல்வி கற்றசமயம் ஒருநாள் இயறகைக் கடனைக் கழிக்க பற்றை மறைவுக்குச் சென்றார் என்றும் -

அங்கு நின்ற பிரஸ்தாப இளைஞன் தன்னை பலாத்காரம் செய்தார் என்றும் அப்பெண் தெரிவித்தார்.

பிரஸ்தாப பெண்ணை அழைத்துச் சென்று சம்பந்தப்பட்டவரை கைது செய்யும்படி நீதிவான் அச்சுவேலிப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

பெண்ணை அழைத்துச் சென்ற பொலஸார் வசாவிளான் குட்டியபுலம் பகுதியில் வைத்து சம்பந்தப்பட்ட நபர் எனச் சந்தேகிக்கும் இளைஞரைக் கைது செய்தனர். சம்பந்தப்பட்ட பெண்ணின் தாயாரும் கைதான இளைஞரின் தாயாரும் சகோதரி முறையானவர்கள் என்பது தெரியவந்தது.

பிரஸ்தாப இளைஞர் யாழ். நீதிவான் முன் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். அவரை அடுத்த மாதம் 2ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ-3)

## கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும்

# திலீபன் மருத்துவ நிலையங்களில் 16, 067 பேருக்குச் சிகிச்சை!

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினர் நடத்தும் சிகிச்சை நிலையங்களில் கடந்த டிசெம்பர் மாதத்தில் 16 ஆயிரத்து 67பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை நடுவப்பணியகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திலீபன் மருத்துவ நிலையங்களான மாங்குளத்தில் ஆயிரத்து 659 பேருக்கும் ஐயன்குளத்தில் ஆயிரத்து 80 பேருக்கும் கற்சிலைமடுவில் 5 ஆயிரத்து 630பேருக்கும் அளம்பிலில் ஆயிரத்து 153பேருக்கும் பூநகரியில் ஆயிரத்து 537பேருக்கும் ஆழியவளையில் ஆயிரத்து 501பேருக்கும் நைனாமடுவில் 753பேருக்கும் கறுக்காய்க்குளத்தில் 976பேருக்கும் புளியங்குளத்தில் ஆயிரத்து 778 பேருக்கும் மொத்தம் 16ஆயிரத்து 67பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

இதில் கூடுதலாக சுவாசப் பாதைத் தொற்றினால் 288பேரும் வைரஸ் காய்ச்சலினால் 2ஆயிரத்து 435பேரும் நாரி வலியினால் ஆயிரத்து 472பேரும் காயங்களினால் ஆயிரத்து 366பேரும் தோல் நோயினால் ஆயிரத்து 265பேரும் சிகிச்சை பெற்றனர். அத்துடன் திலீபன் மருத்துவ நிலையங்களை அண்டியுள்ள கிராமங்களிலுள்ள மக்களிற்கு சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன - என்றுள்ளது.

## கால் நடைகள் பாதிப்பு

கோப்பாய்,ஜன.26

தற்போது நிலவும் வரட்சியால் கால் நடைகள் மேய்ச்சலிற்காக அவதியுறுவதாக கால்நடைகளை வளர்ப்பவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்

அறுவடைக் காலமும் முடிவுறாததால் கால்நடைகளை மேய்ச்சலுக்காகக் கூட்டி செல்ல முடியாத நிலையும உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலை ஜூன், ஜூலை,ஓகஸ்ட் மாதங்களிலேயே முன்னர் எதிர்கொண்டிருந்ததாகவும்.

இவ்வருடம் ஜனவரி மாதத்திலேயே இந்நிலை ஏற்பட்டு விட்டதாகவும் கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர். (ஒ-72)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை; சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.26

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

பெறுபேறுகளில் முன்கிடைத்த முடிவுகள் பாடசாலை ரீதியாக வருமாறு:-

**உரும்பிராய் சைவத்தமிழ்**
தோற்றியோர்-81, சித்தி-06
எஸ்.சர்மி (131), எஸ்.அனுசன் (135), பி.நவநீதன் (123), எஸ்.சியாமலி (145), வி.கேசனா(159), பி.நீரஜா (130),

**கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை**
தோற்றியோர்-22, சித்தி-04
எஸ்.கிருதிகா (121), வி.லக்ஷி (119), எஸ்.ஸ்ரீபரா (122), யு.ஜானுதி (126),

**யாழ். மத்தியகல்லூரி**
தோற்றியோர் - 76, சித்தி - 16
ஏ.தனுசன் (130), ஆர்.வதுசாணன (135), ஆர்.இ.இனோஜன் (136), ஈ.பிருதுவிராஜ் (145), எஸ்.ஆர்.குமரன் (123), எஸ்.சதொக் (123), ரி.எஸ்.சுபேசன் (121), எஸ்.ஸ்ரீலக்ஷ்மன் (121), எஸ்.ஸ்ரீபிரவீன் (126), எஸ்.சுஜிகரன் (141), ஏ.சுகிர்தன் (138), வை.கோகிலரூபன் (130), ஆர்.நிரோ ஜன் (119), எஸ்.கவிசாந்தன் (122), வி.நிதுசன் (125), எம்.அருங்கணேசன் (118),

**சுண்டிக்குளி மகளிர்**
தோற்றியோர்-89, சித்தி-23
எஸ்.வேல்முருகன்(134), எஸ்.வசந்தகுமார்(122), ஜே.விஸ்வநாதன் (126), எல்.ஜெயபாலசிங்கம் (139), ஜே.ஜெயகுமார் (122), வி.ஜெயகுமார் (122), ஜி.ஜஸ்ரின் (121), ரி.ரவீந்திரன் (139), ஆர்.எஸ்.அரகுலசிங்கி (131), ஏ.சண்முகாநந்தன் (138), எம்.ஷாந்தன் (130), எம்.சுரேந்திரன்(127), ஜே.தர்மகுலசிங்கம் (126), எஸ்.பூலோகசிங்கம் (139), ஏ.சுகுமார்(152), எஸ்.வடிவேல் (127), எஸ்.விஜயகுமாரன் (153), என்.ஆயிலியம் (118), ஏ.பாஸ்கரசிங்கம் (131), பி.இளையநாதன் (133), பி.ஸ்மெயில் (129), ரி.ஞானசேகரம் (160), எஸ்.பரமலிங்கம் (118).

**சென்.ஜோன்ஸ்**
தோற்றியோர்-73, சித்தி-19
ரி.ரகுசாந்தன்(136), டி.சாய் கிருஷ்ணா (118), ரி.திலக்ஷன் (135), எஸ்.விதுர்சன் (121), கே.விசாகன் (125), ரி.அகர்ஷன்(121), என்.அனுசுதன் (151),ஏ.கௌசிகன்(136), ரி.பிரணவராவ் (130), ரி.கபிலன்(123), எஸ்.கேதிரி (146), எஸ்.லெஸ்லிலவன்(138), எஸ்.பிரணவன்(124), ஏ.எஸ்.முத்துக்குமார் (136), பி.டிஷாந்(153), எஸ்.கஜந்தன் (151), எஸ்.யசோதகிருஷ்ணா(126), ஆர்.கஜந்தன்(144), பி.மதுசுதன்(131),

**கோப்பாய் ம.வி.**
தோற்றியோர் 17, சித்தி 1,
பி.மயூரன் (119)

**இணுவில் மத்தி**
தோற்றியோர் - 108, சித்தி - 15
ஆர்.சுகிகரன்(122), சி.அருண்(137), பி.ஜதுசன்(123), ரி.கஜேந்திரன்(141), எம்.கீர்த்திகன்(138), எஸ்.கிருஷ்ணன் (139), என்.நவநீபன்(140), ஜே.தரிசா (120), எஸ்.அகிலா(124), பி.ஜானகி (123), எம்.மிதுலா (131), எஸ்.ரசிந்தா (127), எஸ்.சஞ்சீவன்(127), வி.வாமனன் (122), ரி.தனுசியன்(143), ரி.தீபன் (127),

**உரும்பிராய் சந்திரோதயா**
தோற்றியோர் 37, சித்தி - 1
வி.சுகனியா(141),

**அச்சுவேலி மத்திய கல்லூரி**
தோற்றியோர் - 68, சித்தி - 2
ரி.ஜெரூயன்(130), எஸ்.கஸ்தூரி (119),

**ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்**
தோற்றியோர் -41, சித்தி -5
எஸ்.அதிதரன்(130), எஸ்.நாராஜனி (119), ஜே.கஜனி(125), எம்.சரண்ஜன்(142), ரி.பிரசன்னா(139),

**பற்றிக்ஸ் கல்லூரி**
தோற்றியோர் 77 - சித்தி 12
ஏ.ரி.யுடிசன்(120), எஸ்.ஜே.நிதர்சன்(157), இ.ஜெனாத்(129), ஜே.ஜே.திவியானந்(137), வி.எம்.சற்ராஜா(120), ஏ.அஜித்கர்(140), என்.ஜே.ரெறோனி(141), எல்.பிரதீபன் (120), எஸ்.ஏ.எக்ஸ். விஜர்(136), ஜே.ஏ.அலன்ராஜ்(151), டி.மிக்கிஅருள்(129), டி.சஞ்சீவ் (130),

**புத்தூர் சோமஸ்கந்தா**
தோற்றியோர் - 78, சித்தி -3
ஏ.தரகுலன்(123), எஸ்.நர்சுஜா(151), ஆர்.பவித்திரா(145),

**தெல்லிப்பழை மகாஜனா**
தோற்றியோர்-54, சித்தி-09
எம்.அஜந்தன்(139), ஆர்.துஷாந்தன் (120), ஜே. ஜெயக்கமலன் (133), வை.ஆரணி (121), ஜி.சுபான்கி(156), ஏ.றதிபனா (128), பி.திவாரகன் (146), கே.நிரேஸ் (118), ரி.நேதாயினி (119)

**உடுவில் மகளிர்**
தோற்றியோர்-116, சித்தி-29
ஜே.திவிஜன்(131), என். தினேஸ் (136), எஸ்.திவிஜன் (137), எம்.துவாகரன் (166), ஏ.தோமஸ்(139),

எம்.செந்தூரன் (123), பீ.சுதன் (126), பி.சிந்துயன் (121), எஸ்.சிவலக்ஸ்மன்(125), ரி.றகீதரன்(124), எஸ்.புரசன்னா(136), ரி.கீர்த்திகன் (167), எஸ்.யதுர்சன்(149), ஏ.ஜி.ஜோன்சன். (139), ப.கரிசக்தி.(126), ஆர்.பவிசன்(142), எஸ்.துவாரகா. (122), கே.சாரன்னியா (119), கே.சுபதர்சனா (129), எஸ்.சிந்துமதி (119), எம்.சாரன்ஜா(119), கே.சப்திகா(124), எஸ்.சாம்பவி(138),ஆர் பிரதீபா(129), கே.மாதங்கி(128), எம்.கம்ஷக்வனி (123), ஆர்.ஆர்.டிலுஜா (118), வை.அபிராமி(120), ஏ.ஜே.ஆன்றிவ்ஜா(130). (ஒ-4-7)

# போதை தலைக்கேறியதால் ‘நடிப்பு’ உயிரைப் பறித்தது!

கொழும்பு, ஜன.26

போதை தலைக்கேறினால் ஒருசிலர் விசித்திர நடவடிக்கைகளில் ஈடுபடுவதுண்டு. அத்தகைய நடவடிக்கைகளில் அவர்களது உயிர் பறிபோவது அபூர்வமாகவே இடம்பெறுகிறது.

இத்தகைய அபூர்வ சம்பவம் தென்னிலங்கையில் சமீபத்தில் இடம்பெற்றுள்ளது.

வாதுவ பகுதியைச் சேர்ந்தவர் சந்தநாயக்க. இவர் சம்பவதினத்தன்று மது அருந்திவிட்டு போதை தலைக்கேற வீட்டுக்குச் சென்றார். வீட்டுக்கு வந்த அவர் மனைவியுடன் உரையாடினார். அப்போது தூக்குத் தண்டனை குறித்துப் பேச்சு வந்தது. தூக்குத் தண்டனை பற்றி மனைவிக்கு விளக்கினார் சந்தநாயக்க.

மனிதர்களைத் தூக்கில் இடுவது எப்படியென்று தனது மனைவிக்குச் செய்துகாட்ட அவர் எத்தனித்தார்.

தனது கழுத்தில் வயரொன்றைப் பிணைத்துக் கொண்ட அவர், கதிரையில் ஏறிநின்றபடி வயரின் மறு முனையை வீட்டுக் கூரை மரத்துடன் பிணைத்தார். அப்போது அவர் ஏறி நின்றிருந்த கதிரை தவறுதலாகச் சாய்ந்து விழுந்தது. இதனையடுத்து அந்தரத்தில் தொங்கிய சந்தநாயக்க மூச்சுத் திணறி மரணமானார்.

44 வயதுடைய மின் தொழில்நுட்ப ஊழியரான மேற்படி நபர் ஒரு பிள்ளையின் தந்தையுமாவார்.

**Passion விளையாட்டுக் கழகம் நடத்தும்**
**மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டி**

பன்னிரு ஓவர்கள் ஒன்பது பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:

a) டிவி வீடியோ சென்ரர்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(IIS computer Institute முன்பாக)

b) அருள் தொலைத்தொடர்பகம்
இல 01, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(கால்நடை வைத்தியசாலை முன்பாக)

c) E - Touch
மருதனார்மடம் சந்தி, மருதனார்மடம்.

d) சங்கானை பாமசி,
சங்கானை.

ஒவ்வொரு போட்டியிலும் ஆட்ட நாயகன் தெரிவு செய்யப்படுவார்.

விண்ணப்ப முடிவு திகதி : 05-02-2004

NOTE: போட்டியின் முடிவுகள் சக்தி FM இல் அறிவிக்கப்படும்.
Passion Sports Club

(27643)(36-13-14)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 22 - 11 - 1949



மறைவு 25 - 01 - 2004

### சின்னத்துரை பவளகாந்தன்
(கிளை முகாமையாளர்)

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
காத்து நின்று நல்ல பணியாளராகக் கடமை
ஆற்றி அர்ப்பணிப்புடன் ஆற்றிய அவர்தம்
சேவையை நினைவு கூருகிறோம்.
எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகிறோம். அன்னாரது குடும்பத்தார்,
உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலி. கிழக்கு தென்பகுதி
ப.நோ.கூ. சங்கம்,
நீர்வேலி.

பணிப்பாளர், பணியாளர்.

(சி-32935)(36-13-14)

ஸ்ரீ மீனாட்சி அம்பாள் துணை!
ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம!

## 31 ஆம் நாள் நினைவு மலர்த் தூவல்

தாய் மடியில் 19 - 04 - 1939



தலைவன் அடியில் 27 - 12 - 2003

அமரர்

### நாகமணி சிவானந்தம்
(ஆனந்தம் மெக்கானிக்)

நேற்றுவரை எம்மோடு நிறைந்திருந்தீர்!
நிறைவான -
போற்றுவழி காட்டி புகழீந்தீர்!
இன்றைக்கு -
காற்றடைத்த பையே காயமென்று
நு[illegible]ன்மை நிலை நாட்டிக் கனவானீர்!
எம்மையா -
என்றென்றும் எம்நெஞ்சில் உம் நினைவு
ஏற்றமொடு நிற்கும் - அஞ்சலித்தோம்
வீற்றிருப்பீர் இறைபாதம் - சுகமுடனே
வியந்து பணிந்து கரங்குவித்தோம்!
ஓம் சாந்தி!

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

-குடும்பத்தினர்-

(27648)(36-13-14)

## ஆரம்ப கணிதபாட ஆலோசகருக்கு!

தென்மராட்சி,ஜன.26

யாழ்.மாவட்டக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்ப கணித பாட ஆலோசகர்களுக்கான சேவைக்கால பயிற்சிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறுமென மாகாணக் கல்விப் பணிப்பாளா சகல கல்வி வலயங்களுக்கும் அறிவிததுள்ளார் (ஒ-117)

## கணனி மயப்படுத்த நடவடிக்கை

உடுவில் கோட்ட பாடசாலைகளைக் கணனிமயப்படுத்துவதற்கு உடுவில் கோட்ட கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதன்கீழ் கணனிகள் இல்லாத பாடசாலைகளுக்கு அரசசார் பற்ற நிறுவனங்களின் உதவியுடன் கணனிகள் வழங்கப்படவுள்ளன. கற்பித்தல் நுட்பங்கள், தொழில் நுட்ப உதவிகள் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கபட்டுவருகின்றன. ஆசிரியர்கள, மாணவ்கள் இவ் வருடத்தில் முழுக் கணனி பற்றிய அறிவினைப் பெறுவதற்கான வழிவகைகள் செய்வதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

(ஒ-149)

## கிளைக்கடை திறப்பு

கொழும்புத்துறை,ஜன.26

யாழ்.பல நோ. கூ. சங்கத்தின் கொழுமபுத்துறை 21 ஆம் இலக்க கிளை கடந்த வெள்ளிக்கிழமை புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை வீடொன்றில் இயங்கி வந்த இக்கிளையை இதற்கென புதிதாக 3ஆம் குறுக்கு வீதியில் நிறுவப்பட்டுள்ள கடையில் சங்கத் தலைவர் சூ.சிறில் திறந்துவைத்தார்.

**தவறிவிட்டது**

சாவகச்சேரி கோபி கொமினிகேசனுக்கும் கைதடி கமநல சேவை நிலையத்துக்கும் இடையில் 22.01.2004 வியாழக்கிழமை 1 1/2 பவுண் நிறையுள்ள கைச்சங்கிலி தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்

கோபி கொமினிகேசன்,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
(27644)(36) T.P: 0602212901

**மில் வேலைக்கு ஆள் தேவை**

எமது மில்லில் வேலை செய்வதற்கு ஆள் தேவை.
விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

திரு.கா.புலேந்திரராஜா,
16/4, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு. (27439)(36)

**கணனி பக்கவடிவமைப்பாளர் தேவை**

கணனியில் Corel Draw அல்லது Page Maker முறையில் பக்கவடிவமைப்பு செய்யக் கூடியவர்கள் அல்லது இத்துறையைக் கற்று வேலை பயில விரும்புபவர்கள் தேவை.
இன்று (26.01.2004) திங்கட்கிழமை பிற்பகல் 4-5மணிக்குள் நேரில் வரவும்.

செந்தில் அச்சகம்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (27641)(26-13-14-36)

**காணவில்லை**

176, நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தில் வெள்ளை நிற பொமேரியன் பெண் நாய் 24.1.2004 இலிருந்து காணவில்லை. கண்டவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும.

T.P 5918 (27635)(36-13-14)

**House Wanted for rent**

House with three/four bed rooms in Jaffna Municipal Council area in good environment.
Please apply within three days.
Ad.No.2150,
C/O Uthayan,
Jaffna.

(சி-32928)(36-13-14)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 05 - 1983



மறைவு 26 - 01 - 2000

### திருமதி மயூரன் டல்சியா

கண்ணெனக் காத்த உந்தன்
கணவனைத் தவிக்க விட்டாய்!
காந்தமாய்ப் பற்றிக் கொண்ட
தாய், தங்கை ஏங்க
படைத்தவன் அழைப்பை ஏற்று
பறந்திட்டாய் எமைத் தவிக்க விட்டு!
மாறாது நம் துயர் எம்முயிர் மாளுமட்டும்!
என்றும் உங்கள் நினைவுடன் நாமிங்கு வாழ்கிறோம்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை.

பிரிவால் துயருறும்:
கணவர், தாய், தங்கை, உறவினர்கள்.

(27649)(36-13-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் உப தலைவர் ஆசீர்வாதம் இம்மனுவல் அவர்களின் அன்புத் தந்தையார் மத்தியாஸ் ஆசீர்வாதம் (செல்லத்துரை) அவர்களின் மறைவையிட்டு நாம் மிகவும் துயரமடைவதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகம்,
குருநகர் கடலுணவு ஏற்றுமதியாளர் நிறுவனம்.

(27647)(36-13-14)

## ஆழ்ந்த அனுதாபம்



அமரர்
**சின்னையா கனகசபை**
(றீகல் உரிமையாளர்)

அவர்களின் மரணத்துயரில் வேதனையுறும் குடும்பத்தினருடன் நாமும் கலந்து துயரடையும் அவ்வேளை, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம.

தாவடி,
கொக்குவில்.

நயினை எஸ். சோமேஸ்வரபிள்ளை
(பங்கஜாவின் மாமா குடும்பத்தினர்)
(27638)(36-13-14)

## கண்ணீர் அஞ்சலி

றீகல் சவுண்ட் & றீகல் வீடியோ உரிமையாளர்

**சின்னையா கனகசபை**

அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு நாம் மிகவும் துயரடைகின்றோம். அன்னாரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மூர்த்தி விளம்பர சேவை
(தேவி அச்சக ஒழுங்கை)
114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன் 2789.

(சி-32930) (26-14-13-36)

## துயர் பகிர்கின்றோம்



**சின்னையா கனகசபை**
(றீகல்)

சிங்கம் சிதறியதோ...
வங்கக் கடலும் வற்றியதோ...
மாமேருவும் மறைந்ததுவோ...
நாமேன் கலங்கியினி - இறை
அஞ்சலியால் துயர் பகிர்ந்திடவே!

வடிவம்மா குடும்பத்தினர்,
ஈச்சமோட்டை, கடற்கரை வீதி.
(27640)(36-14-13)

## மரண அறிவித்தல்

**சின்னையா கனகசபை (றீகல்)**
(உரிமையாளர்,றீகல் சவுண்ட்ஸ் & வீடியோ)

யாழ்., ஈச்சமோட்டை, கடற்கரை வீதியைச சேர்ந்த றீகல் என அன்பாக அழைக்கப்படும் சின்னையா கனகசபை (22-01.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26-01-2004)திங்கட்கிழமை காலை ஈச்சமோட்டை, கடற்கரை வீதியில் உள்ள அவரது இல்லத்தில நடைபெற்று, பகல் 10மணியளவில் பூதவுடல் தகனக்கிரி[illegible]க்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

42/7, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2896. (27639)(36-14-13)

தகவல்:
குடும்பத்தினர்.

# சுகாதாரச் சேவை ஊழியர்கள் இன்றுமுதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம்

## பிரதமர் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றக் கோரிக்கை

கொழும்பு,ஜன.26

சுகாதாரச் சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக பிரதமர் அளித்த வாக்குறுதிகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படாமல் இருட்டடிப்புச்செய்யப்படுகிறது. அதனை உடனடியாக வெளியிட வேண்டும். இன்றேல் இன்று நண்பகல் 12 மணி முதல் திட்டமிட்டபடி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்று சுகாதாரச் சேவை ஊழியர்களின் தொழிற்சங்க இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

தற்பொழுது சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கும் சுகாதாரச் சேவை ஊழியர்கள் இன்று சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 21ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தத்திட்டமிட்டிருந்தோம். ஆனால், இவ்விடயத்தில் பிரதமர் தலையிட்டு சில உறுதிமொழிகளை வழங்கினார். அதனால் சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டத்தைக் கைவிட்டு சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தோம்.

பிரதமரின் தீர்வுகள் தொடர்பாக இன்று நண்பகலுக்குள் சரியான பதில கிடைக்காவிட்டால் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் இன்று 12 மணிக்கு ஆரம்பமாகும். எமது கோரிக்கைக்காக தமது உயிரைத்தியாகம் செய்ய 42 பேர் தயாராக இருக்கின்றனர் என்று சங்கத்தின் இணைப்பாளரான ரவிகுமுதேஷ மேலும் தெரிவித்தார்.

# வேலணையில் மாட்டிறைச்சிக் கடையை மீளத் திறப்பது பற்றிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.26

தீவுப் பகுதி தெற்கு, வேலணை பிரதேச சபை எல்லைக்குள் மாட்டிறைச்சிக்கடையை மீண்டும் இயங்க வைப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வி[illegible]கின்றது.

வேலணை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் அமைந்திருக்கும் மத நிறுவனங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியனவற்றின் பிரதிநிதிகளும் சமூக நலன்பேணும் பிரதிநிதிகள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற நிர்வாகிகள் ஆகியோரையும் இந்தக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேலணை பிரதேச சபை செயலாளர் அறிவித்திருக்கின்றார்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்.பிரதேச செயலர் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

தீவுப்பகுதி தெற்கில் நீண்ட காலமாக இயங்கிவந்த மாட்டிறைச்சிக்கடை கடந்த முதலாம் திகதி தொடக்கம் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது.

(ஐ)

# தென்மராட்சி கிராம அலுவலர்கள் கலந்துரையாடல்

சாவகச்சேரி,ஜன.26

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம சேவையாளர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை பிரதேசசெயலகத்தில் இடம்பெறவுள்ளது.

சகல கிராம சேவையாளர்களையும் சமுகம் அளிக்கும்படி பிரதேச செயலர் எஸ்.சிறிவாசன் கேட்டுள்ளார். (ஐ-31)


**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

**அமரர் நிக்ஷன்**

இன்றைய உதயனில் 12 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள அமரர் நிக்ஷனின் (மரியாம்பிள்ளை மெகாமிற் அமலராஜன்) 31 ஆம் நாள் நினைவஞ்சலி - நன்றி நவிலல் விளம்பரத்தில் வேளாங்கண்ணி கோயில் நண்பர்களின் விவரம் தவறிவிட்டது. விளம்பரத்தில் அதனையும் சேர்த்து வாசிக்கவும்.

குருநகர், யாழ்ப்பாணம். குடும்பத்தினர். (C32936) (12)

**வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின்**

**தையல் மனையியல் கண்காட்சியும் விற்பனையும் 2003**

இடம்: மகளிர் அபிவிருத்தி நிலையம், புலோலி-தெற்கு, புலோலி.

காலம்: 26.01.2004 - 27.01.2004 (திங்கள், செவ்வாய்)

[illegible].ப.9.30 மணி தொடக்கம் பி.ப.5.00மணிவரை

தலைவர்: திரு.ஆ.சிவசுவாமி (பிரதேச செயலர், பருத்தித்துறை)

பிரதமவிருந்தினர் திரு.து.வைத்திலிங்கம் (மேலதிக செயலாளர், இந்துசமய விவகார அலுவல்கள்அமைச்சு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தையல் போதனாசிரியரும், மாணவிகளும்.

(சி-32938) (14-12-13-32)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

மண்ணில் 1936 ✿ 10 ✿ 25



விண்ணில் 2003 ✿ 12 ✿ 27

**அமரர் மாணிக்கம் நடராசா (வெள்ளையப்பு)**

அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்தீர், இன்று எமை ஆற்றுவார் இன்றி தவிக்கின்றோம்.
என்றும் உம் நினைவுடன்....

முருகன் வீதி, பாரதி புலம், திருநெல்வேலி. (சி-32937)(32-12-13) - குடும்பத்தினர்.

**BARATHY**

சித்தன்கேணி

பொருளியல் A/L 2005

பாட அலகு - 3

பேரினப் பொருளாதாரம்

திங்கள் - வியாழன் 3.30 - 5.00 வரை

ஆரம்பம் : இன்று (26.01.2004)

S.வரதராஜன் B.A (HONS)

(27646) (32)

**லக்ஷ்மி இணுவில்**

அஜித், கார்த்திக்,ரோஜா நடித்த

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் (ரீல்ஸ்)

காட்சிநேரம் :10.30,2.30,6.30. (பு.நே.)

(சி-32934)

**ராஜா யாழ்ப்பாணம்**

பிரசாந்த் நடித்த


ஜெய் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30,9.30 (புநே.)

(சி-32369) (32)

**நிரஞ்சனாஸ் சங்கானை**

ஷாம், அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த



இயற்கை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

Can You Do A Lote Come விரைவில் HULK

(C-32370) (32)

**நாகம்ஸ் சுன்னாகம்**

கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த

E.A.P.இன் பொங்கல் வெளியீடு

விருமாண்டி (சண்டியர்) (ரீல்ஸ்)



காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(சி-32739)(31)

**லிபேட்டி அச்சுவேலி**

ராஜ்கிரன், மீரா கிருஷ்ணா, விஜயகுமார் நடித்த

கொஞ்சிப் பேசலாமா? (ரீல்ஸ்)

சினிமாஸ் லிமிட்டட் வெளியீடு

தினசரி காட்சி: 3.00, 7.00.

(C-32863)


# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை

காரைநகர், களபூமி, பொன்னாவளையை பிறப்பிடமாகவும், 9/2 கோபால ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை நேற்று (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வே.சாம்பசிவம் (மகன்)
(உதவி அரசாங்க அதிபர், காரைநகர்.)

(27654)(12-32)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணேசராசா இந்திராணி

மூளாயைச் சேர்ந்த திருமதி கணேசராசா இந்திராணி 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் க.கணேசராசா (J.P.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம்-நகுலாம்பிகை ஆகியோரின் அன்பு மகளும் தயாபரன், சிறிதரன் (U.S.A.), கருணாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலாராணி, கௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜானினி, காயித்திரி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2004) திங்கட்கிழமை மு.ப.10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பித்தனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மூளாய். (C-32942)(32-12) கணேசராசா (கணவர்).

## திருமதி குமாரசாமி அன்னலச்சுமி

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி அன்னலச்சுமி நேற்று (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2004) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காராளர் வளவு, அல்வாய் கிழக்கு, அல்வாய். (சி-32941)(12-13-32)

தகவல்
மருமகன் சி.பேரானந்தம்
(ஓய்வுபெற்ற C.T.B உத்தியோகத்தர்)

## கந்தையா சிவசுப்பிரமணியம் (J.P.)

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, 3ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும், தற்போது கனடாவில் வசித்துவந்தவரும், முன்னாள் ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியாரும், யாழ்.அரசாங்க அதிபரின் பிரத்தியேகச் செயலாளருமாகிய கந்தையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 24.01.2004 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற செனகரத்தினம் - புஷ்பம் தம்பதிகளின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சாந்தபவானி (உரும்பிராய்), சிவகரன் (தொழில்நுட்பவியலாளர்,கொழும்பு மாநகரசபை), ரவி (கனடா), முரளி (லண்டன்), சுதன் (கனடா), சந்திரவதனி (ஆசிரியர், உரும்பிராய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (சிரேஷ்ட உதவி கூட்டுறவு ஆணையாளர், வடக்கு-கிழக்கு மாகாண சபை), பத்மினி (கொழும்பு), ரஞ்சி (கனடா), பிரேமா (லண்டன்), ரதி (கனடா), பகீரதன் (மாவட்ட தகவல் அலுவலர், யாழ்ப்பாணம் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்) ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தி, மயூரதன், இளங்கோதை, பவானந், கஜனந், ஜெரனி, மெலனி, மதுரா, பிரியங்கன், டிலக்ஷன், சுதர்சினி, சஞ்ஜெயன், தனஞ்செயன், ஐஸ்வர்யா ஆகியோரின் அன்புப் பேரனும் நிரூத்தனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மகள்மார்: சாந்தபவானி,சந்திரவதனி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (சி-32940)(12-13-32)

தகவல்:
சிவகரன் (மகன்),
42,32ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.
தொ.பே.இல:2363614

## பொன்னம்பலம் விநாயகமூர்த்தி

(முன்னாள் கௌரவ செயலாளர், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், கிளிநொச்சி)

பூநகரியைப் பிறப்பிடமாகவும் பரவிப்பாஞ்சான் , கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விநாயகமூர்த்தி 22.01.2004 அன்று காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் - செல்லம்மாவின் அன்பு மகனும் தையல்நாயகியின அன்புக் கணவரும் கந்தையா - இராசம்மாவின் அன்பு மருமகனும் குமுதினி, சந்துரு, திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும் பவாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம், ஞானசேகரம்பிள்ளை (கனடா), பாலச்சந்திரன் (கிராமசேவையாளர், பூநகரி), சீதாலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் பாலாம்பிகை, சிவஞானம், சோமசுந்தரம், கல்யாணசுந்தரம் இந்திராணி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2004) திங்கட்கிழமை கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளிநொச்சி. (27650)(12-13-32)

தகவல்:
திருமதி வி.தையல்நாயகி (மனைவி).
(ஆசிரியர், கிளி.மகாவித்தியாலயம்).

## சிங்கராஜர் வரப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற S.D.W. கச்சேரி, மட்டக்களப்பு)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு, கல்லடி இல.32, டச்பார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராஜர் வரப்பிரகாசம் அவர்கள 24.01.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று (26.01.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (27651)(12-13-32)

தகவல்:
ஜேக்கப் ராசகுமார்
(மைத்துனர்)

## நல்லதம்பி சோமசுந்தரம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சோமசுந்தரம் அவர்கள் 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - சின்னத்தங்கச்சியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் சுப்பிரமணியம் வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகேஸ்வரன், இராஜேஸ்வரி (சுவிஸ்), ரேணுகேஸ்வரி, காலஞ்சென்ற சுந்தரேஸ்வரன், கோமளேஸ்வரி, வெங்கடேஸ்வரன் (சுவிஸ்), கணேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் குகானந்தன் (சுவிஸ்), முத்துராசா சுசீலாதேவி ஆகியோரின் மாமனாரும் சுந்தரிஷி (சுவிஸ்), பிரியந்தி, சிவாத்மிகா, சுபாகி, நிதர்ஷன், நிதூஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.01.2004) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி, இணுவில் மேற்கு. (சி-32939)(12-13-32)

தகவல்:
ந.சுப்பிரமணியம்
(சகோதரன்)

# சமாதான முயற்சிகள், யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து வாஷிங்ரன் மாநாட்டில் பேசவேண்டிவரும்

## அநுராதபுரக் கூட்டத்தில் பிரதமர் தெரிவிப்பு

அடுத்த மாதம் 17ஆம் திகதி வாஷிங்ரனில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன், இலங்கை அரசியல் இழுபறிக்கு இணக்கப்பாடு காண வேண்டும். இல்லையேல், இலங்கையின் சமாதான முயற்சிகள், யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஆகியவை தொடர்பாகவும் அந்த மாநாட்டில் பேசவேண்டியிருக்கும்.

- இப்படிக் கூறியுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அநுராதபுரம், ஹொரவபொத்தானைப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்நிறுத்த உடன்படிக்கையை நாம் நடைமுறைப்படுத்தவேண்டும். போர்நிறுத்த உடன்படிக்கை 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. அன்று அதனுடன் தொடர்புடைய அனைத்து அமைச்சுக்களும் அரசிடம் இருந்தன. ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான - வலுவான - பின்னணியும் அரசிடம் இருந்தது. இதனைப் புலிகளும் குறிப்பிட்டிருந்தனர். ஒப்பந்தம் தொடர்பான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பிரதமர் என்ற ரீதியில் எனக்கும் இருந்தது. - இவ்வாறு ஒரு சௌகரியமான சூழ்நிலையில் நாம் அன்று சிறப்பாகச் செயற்பட்டு வந்தோம்.

அதனால், நாம் மீண்டும் இன்று அவ்வாறான பின்னணிக்குள் செல்ல வேண்டும். இல்லாவிட்டால், இதற்கு மாற்றுவழியாக நாம் புதியதொரு வலுவான கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்குத் தயாராக இருக்கின்றபோதும், அரசின் தாமதம் இதற்குத் தடையாக வுள்ளது. உதவி வழங்கும் மாநாட்டில் இணைத் தலைமை வகித்த நாடுகளின் பிரதிநிதிகள் வாஷிங்ரனில் எதிர்வரும் 17ஆம் திகதி சந்திக்கவுள்ளனர். அமெரிக்காவின் அழைப்பிற்கு ஏற்ப ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். டோக்கியோ மாநாட்டின் பிரகடனத்திற்கு அமைய இவர்கள் அடிக்கடி சந்தித்து மீளாய்வு செய்யவுள்ளனர். இதன்படி, இவர்களது முதலாவது மீளாய்வுக் கூட்டம் அடுத்த மாதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, நாம் 17ஆம் திகதிக்குள் இலங்கையின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பான இணக்கப்பாடொன்றுக்கு வரவேண்டும். இல்லாவிட்டால், சமாதானம், போர்நிறுத்த உடன்படிக்கை என்பன குறித்தும் மாநாட்டில் கலந்துரையாடப்படும். இதனைத் தடுக்க முடியாது. நாம் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால் இணக்கப்பாட்டிற்கு அமைய செயற்பட முடியுமா என்பது பற்றியும் அங்கு சர்வதேச தரப்பினர் .பேசுவார்கள். எனவே, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்ததாகும்.

- இவ்வாறு பிரதமர் அங்கு மேலும் தெரிவித்தார்.

# 'யுனிசெவ்'வின் சிறுவர் படைப்பட்டியலை விடுதலைப் புலிகள் மீள் பரிசீலனை

## உண்மையான வயதைக் கண்டறிய நடவடிக்கை

கிளிநொச்சி,ஜன.26

18 வயதுக்கு குறைந்தவர்களென 'யுனிசெவ்' அமைப்பினால் வெளியிடப்பட்ட சிறுவர் படையினர் பட்டியலில் 10 சதவீதமானோர் மட்டுமே பிறப்புச் சான்றிதழ்களைக் கொண்டிருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளரான தயா மாஸ்ரர் தெரிவித்திருக்கிறார்.

சிறுவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவது குறித்து கவலை வெளியிட்டு, 'யுனிசெவ்' வெளியிட்ட பட்டியலை மூவர் கொண்ட ஒரு குழு மறுபரிசீலனை செய்து வருவதாகவும், எஞ்சியோரின் வயதை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகவும் தயா மாஸ்ரர் மேலும் கூறியிருக்கிறார்.

2003ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி 'யுனிசெவ்' 1,187 பேரின் பெயர்கள் கொண்ட ஒரு பட்டியலைச் சமர்ப்பித்தது எனவும், அவர்களில் 134 போ மட்டுமே தமது வயதை உறுதிபடுத்தும் பிறப்புச் சான்றிதழ்களை வைத்திருந்தனர் எனவும் கூறியிருக்கும் தயா மாஸ்ரர், பட்டியலிலுள்ளவர்களில் 384 பேர் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி 17ஆம் திகதி புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இலங்கையிலுள்ள 'யுனிசெவ்' பிரதிநிதிக்குமிடையே நடைபெற்ற சந்திப்பையடுத்து, 'யுனிசெவ்'வின் பட்டியலை மஙபரிசீலனை செய்ய மூவர் குழுவை தமிழ்ச்செல்வன் பணித்தார். 18 வயதுக்குக் குறைந்தோரை 'யுனிசெவ்' இடைத்தங்கல் முகாமுக்கு உடனடியாக விடுவிக்குமாறும் அவர் உத்தரவிட்டிருக்கிறார். (ஐ)

## தீர்வு என்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள், முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறித்து இன்று அதிக கரிசனை காட்டுகின்றனர். அவர்களின் பார்வையில், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தின் அவசியம் குறித்து உணர்வு இன்று ஏற்பட்டிருக்கின்றது. இன்று சர்வதேச ரீதியாக நாம் எமது பிரச்சினையைக் கொண்டு சென்றிருக்கின்றோம். அதே நேரம், சர்வதேச சமூகம் எம்மைப் பற்றியும் அக்கறை கொள்ளக்கூடிய நிலையை நாம் உருவாக்கி இருக்கின்றோம்.

இன்று மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற விடயங்களில் நாம் அடைநத முன்னேற்றங்கள் பற்றிக் கூறப்படுவதில்லை. அவை பற்றி யாரும் பேசுவதுமில்லை. மக்களை ஆவேசப்படுத்தி - ஆத்திரப்படவைத்து - ஊர்வலம் போகின்ற நிலையை உருவாக்கி இருக்கின்றார்களே தவிர, கடந்த இரண்டு வருடகாலத்தில் முஸ்லிம்கள் குறித்து ஏதோ ஒரு பரிமாணத்தை உருவாக்கி இருக்கின்றோம் என்பதைப்பற்றி யாரும் வாய்திறப்பதில்லை.

முஸ்லிம்கள் குறித்து மாற்றுத் தர்வை நாம் ஒரு முக்கிய அம்சமாக எடுத்து நோக்குகின்ற அதேநேரம், எம்மீதான சர்வதேச சமூகத்தின் பார்வையையும் நாம் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். உலக நாடுகளின் நிதியுதவிகளில் முஸ்லிம்களையும் இணைத்து அவர்களுக்கான பங்கு சரிவரக் கிடைக்கப்பெறும் வகையில் சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திருப்பவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், முஸ்லிம்களுடைய இயல்பு வாழ்க்கை நிலையில் ஏற்பட்ட பல்வேறுபட்ட பாதிபபுக்கள் குறித்த கவனம் சர்வதேச சமூகத்துக்கு இன்று ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், அத்தோடு நாம் நின்றுவிடமுடியாது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் அந்த அரசால் முன்வைக்கப்பட்ட இனப் பிரச்சினைத் தீர்வுக்கான மாற்று யோசனைகளில் நாம் பல திருத்தங்களை அன்றே முன்வைத்தோம். மாற்று யோசனைகளையும் சமர்ப்பித்தோம். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியன் அந்த யோசனைகள் எம்மால் பூரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை அல்ல.

முஸ்லிம் மக்கள் மத்தியில் பாதுகாப்புக் குறித்து அச்சம், கிழக்கிலே இருப்பதைவிட கூடிய அளவில் வடக்கில் போய் குடியேறியவர்களுக்கே இருக்கின்றது.

- இப்படி அவர் அங்கு தெரிவித்தார். (ஐ-9)

## சு.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கையாண்டது.

தற்போது ஜனாதிபதி தலைமையில் ஸ்ரீல.சு.கவும் - ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்துள்ளன. சர்வதேச சமூகத்தை அவமானப்படுத்துகின்ற ஓர் அமைப்புடன் ஜனாதிபதி கூட்டுச் சேர்ந்துள்ளமை நல்ல சகுனம் அல்ல. இது சமாதானத்திற்கும், சர்வதேசத்திற்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும்.

- இப்படி அவர் மேலும் கூறினார். (ஐ-9-5)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் யோசனைப்படி, அரசு தான் விரும்பியவாறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள தேசிய பாதுகாப்பு அமைச்சரையோ அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரையோ நியமிக்க வழியேற்படும்.

அவ்வாறே, சிறுபான்மையினர் பிரச்சினைத் தீர்வுக்கு தனியான தேசிய சபையொன்றை அமைக்கவும் ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே, கடந்த வெள்ளிக்கிழமை கூடிய மனோ - மலிக் குழு, தொடர்ந்து பேச்சு நடத்துவதெனத் தீர்மானித்திருக்கிறது.

ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜி.எம்.கருணாரத்தின மற்றும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே இதுவரை இணக்கம் காணப்பட்டுள்ள விடயங்கள் குறித்து இவ்வாரம் அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு இக்குழுவினர் இணங்கியிருக்கின்றனர் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி - பிரதமர் இடையிலான பிரச்சினையைத் தீர்க்க கடந்த டிசெம்பர் மாதம் இப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரச நிர்வாகம் மற்றும் சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமைகள் குறித்த பிரச்சினைகள் தொடர்பாகவும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்தும் இக்குழு கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் ஜனாதிபதியின் சார்பாக அவரது செயலாளர் டபிள்யூ. ஜி.எம்.கருணாரத்ன மற்றும் சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவெல, பிரதமர் சார்பாக அவரது செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தின் ஒழுக்காற்று பாதுகாப்பு படைப்பிரிவின் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் ஐவன் திஸநாயக்க ஓய்வுபெறும் உரிய காலத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே ஓய்வு பெறுமாறு இராணுவத் தளபதியினால் பணிக்கப்பட்டிருக்கிறார்.

இதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதியன்று ஓய்வுபெறுமாறு மேஜர் ஜெனரல் ஐவன் திஸநாயக்கவுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களைவிட, மற்றோர் இராணுவ அதிகாரியின் பதவி உயர்வு இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. 'மிலேனியம் சிற்றி' இராணுவ இல்ல முற்றுகை தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் பொலீஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொலவின் சகோதரரான லெப்டினன்ட் கேணல் பத்மசிறி உடுகம்பொலவின் பதவி உயர்வுகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன என்று ராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'மிலேனியம் சிற்றி' இராணுவ இல்லம் முற்றுகையிடப்பட்டது தொடர்பாக ஐ.தே.முன்னணி அரசின் பணிப்பின் பேரில் இராணுவம் விசாரணை நடத்தி அறிக்கை கையளித்திருந்தது தெரிந்ததே. இதனைவிட, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஆணைக்குழு ஒன்றை நியமித்து விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கிய பத்திரமொன்றில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல, தனது சிபாரிசுகளைத் தெரிவித்திருந்தார்.

கேணல் டி.பி.திஸாநாயக்க, கேணல் பி.உடுகம்பொல, மேஜர் நஜித் கருணாரத்ன, மேஜர் எச்.பி.டி.எஸ்.ஜயதிலக, மேஜர் கே.வி.ஜயனெத்தி, கோப்ரல் அநுர பீரிஸ், கோப்ரல் ஜே. எச்.ஏ.பி.டி.சில்வா ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இராணுவத் தளபதி சிபாரிசு செய்திருந்தார். (ஐ-9)


ITP JAFFNA SRI LANKA

INFORMATION TECHNOLOGY PARK

Ministry of Rehabilitation, Resettlement & Refugees,
National Housing Secretariat Building,
Near Kachcheri, Kandy Road, Jaffna, Sri Lanka.

Phone 021-2223641, Director- 2223643 E-Mail:itp@sltnet.lk

தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் 2004ஆம் ஆண்டிற்கான புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.விண்ணப்பப் படிவங்களை மேற்படி முகவரியில் 31-01-2004 சனிக்கிழமை வரை பெற்று, பதிவுகளைமேற்கொள்ளவும்.

எமது வளர்ச்சியில் மற்றொரு பரிணாமம்

மிகவிரைவில் -
வடமராட்சி,தென்மராட்சி,
வலிகாமம்,மற்றும் தீவகத்திலும்
புதிய கிளைகள் ஆரம்பம்.

Diploma Courses

| Courses | Duration | Fees |
|---|---|---|
| Diploma in MS-Office | 5 | 2800 |
| Diploma in Hardware Technology | 6 | 3200 |
| Diploma in Desktop Publishing | 5 | 2400 |
| Diploma in Computer Programming | 6 | 5500 |
| Diploma in Internet Technology | 5 | 4500 |

Certificate Courses

| Courses | Duration | Fees |
|---|---|---|
| Ms-Word | 30 Hours | 1000 |
| Ms-Excel | 30 Hours | 1000 |
| Ms-Access | 30 Hours | 1000 |
| Pagemaker | 30 Hours | 1000 |
| CorelDraw | 30 Hours | 1000 |
| AutoCAD | 30 Hours | 1000 |
| C/C++ | 40 Hours | 1800 |
| Visual Basic | 40 Hours | 1800 |
| Java | 40 Hours | 1800 |
| Internet & E-Mail | 40 Hours | 1800 |
| Hardware | 40 Hours | 1800 |
| Oracle | 40 Hours | 1800 |
| Webpage Design | 40 Hours | 1800 |
| HTML & J scripts | 40 Hours | 1800 |

Registration Fees for all the Courses is Rs.250/-only.

On-line Course

Diploma in PC App. & Office Management
Duration - 3 Months , Course fee - 2750/-

விண்ணப்ப முடிவுத் திகதி 31-01-2004

வகுப்புக்கள் ஆரம்பம்
வார இறுதி- 01-02-04
வார நாள் - 02-02-04

Information: Director

Centre for Information Technology

For Further Details: Course Manager



Lingam master - swiss

சுவிஸ் வாழ் தமிழர்களின்
முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss. (26642)(36-14-16)



LOGIC A/L 2005
குறியீட்டு அளவையியல்
(பெறுகைமுறை)
இரு பிரிவுகளாக நடைபெறுகின்றன.
செவ்: 4.30 p.m.
By: P.கமல் (27651)(9-14-22)
BRIGHTMAN



NCA கல்வி நிறுவனம்
சாவரையடி, பருத்தித்துறை.
A/L 2006
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்



நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
A/L - 2005, 2006
கணித, உயிரியல்
புதிய பிரிவு ஆரம்பம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.